101

# செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு-உ௦] சுபானு—ஆவணி௴ 1943 [பரல் ௧௦

10
2 3 OCT 1943
MADRAS

பொருளடக்கம்

குறிப்புக்கள் :
நமது தாய் மொழி :
நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்
திருக்கொடுங் குன்றமாகிய பிரான்மலை :
ஆதிநாத பிள்ளை
இயற்கையிற் காதல் :
வித்துவான் ஜி. சுப்பிரமணிய பிள்ளை, M. A., B. L.
இயற்கை யழகு :
கிளிக்காட்டு இறை யொளியன்
செழுமைக்குரிய பண்டை இந்தியக்கடவுள் :
வித்வான் மா. இராசமாணிக்கம்பிள்ளை, B. O. L.
[illegible] காலத்துச் செந்தமிழ்ச் செல்வி :
[illegible] வித்துவான் ஔவை சு. துரைசாமி பிள்ளை
படிப்பு உரை :
[illegible] இரு[illegible] :

[illegible] ஆண்டுக் கையொப்பம் ரூ. 3 0

175
65
15 0
7L
031m911, N26
N43.20.10
19668

[illegible] திருநெல்வேலி, தென்னிந்திய
[illegible]சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை.

## செந்தமிழ்ச் செல்வி இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

**தலைவர் :**

திரு. பண்டித நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
தஞ்சை.

---

2. ,, பி. சிதம்பரம் பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்.,
வழக்குரைஞர், நாகர்கோவில்.

3. ,, கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், எம். ஏ., எம். எல்.,
தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

4. ,, துடிசைகிழார் அ. சிதம்பரனாரவர்கள்,
பென்ஷன் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், கோவை.

5. ,, மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

6. ,, டி. எஸ். கந்தசாமி முதலியாரவர்கள், பி. ஏ.,
வழக்குரைஞர், சாத்தூர்

7. ,, காழி சிவ. கண்ணுசாமிப் பிள்ளையவர்கள், பி. ஏ.,
தருமபுரவாதீன வித்துவான், சென்னை

8. ,, வித்துவான் மா. இராசமாணிக்கம் அவர்கள், பி. ஓ. எல்.,
தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்பள்ளி, சென்னை

9. ,, வித்துவான் மு. இராசாக்கண்ணு அவர்கள், பி. ஓ. எல்.,
தமிழாசிரியர், அரசினர் விக்டோரியா கல்லூரி, பாலக்காடு

10. ,, இளவழகனாரவர்கள், கழகப் புலவர்.

---


# தொல்காப்பிய உரை நூல்கள்

## அச்சிலிருக்கின்றன

எழுத்ததிகாரம் : நச்சினார்க்கினியர் உரை : பல்வகைக் குறிப்புக்களுடன் (3-ம் பதிப்பு)

சொல்லதிகாரம் : சேனாவரையர் உரை : பல்வகைக் குறிப்புகளுடன் (2-ம் பதிப்பு)

பொருளதிகாரம் : நச்சினார்க்கினியர், பேராசிரியர் உரைகள்.

யசோதர காவியம் : வித்வான் ஔவை சு. துரைசாமி பிள்ளை அவர்கள் எழுதிய விளக்கவுரையுடன் (அச்சில்)

---

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
6, பவழக்காரத் தெரு, சென்னை.

'செந்தமிழ்ச் செல்வி' ஆசிரியர்



வித்துவான்

திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்,

எம்.ஏ., பி.எல்.,

தமிழ் விரிவுரையாளர்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.




சிலம்பு-உ௦] சுபானு—ஆவணி (1943) [பரல்-க௦

# குறிப்புகள்

வாழ்த்து :

திருத் தருமையாதீனத்தின் இருபத்து நான்காம் பட்டத்து அருள்தலைவர் மறைத்திரு. சண்முக தேசிக பரமாசாரிய அடிகளார், ஆதீனத்தின் தலைமை ஏற்றுப் பத்து ஆண்டுகள் நிறைவுற்றமையின், இத் திங்கள் முதற்கிழமையில் அதன் நிறைவு விழா திருத்தருமபுரத்தில் அன்பர் பெருங்குழுவினரால் மிகச் சிறப்பாக நிறைவேறப் பெறுகின்றது.

சுருங்கிய காலமாகிய இப் பத்து ஆண்டுகட்குள், அடிகளார், தருமை ஆதீனத்தின் நிலையைப் பலவகையாலும் உயர்த்திப் பலராலும் புகழப்பெறும் நல் விளக்கத்துக்குக் கொண்டுவந்துள்ளனர். மாநாடு கூட்டுதல், இதழ் வெளியிடுதல், நூல் வெளியிடுதல், விரிவுரைகள் நிகழ்வித்தல், வகுப்பு நடப்பித்தல், பிற இயக்கங்கட்கும் உதவுதல் முதலிய கிளர்ச்சியான பணிகள் பலவும் இவர்கள் நடத்தி, நாட்டின் உள்ளத்தைப் பெரிதுங் கவர்ந்து விளங்குகின்றார்கள். அடிகளார் செயலாற்றல் மிக்கவர்கள். இவர்கள் காலத்தில் திருத் தருமையாதீனம் சிறந்த பல நற்றொண்டுகளை உருவாகச் செய்து முடிக்கும் என்று, தானே நம்பிக்கை அரும்புகின்றது.

நாட்டின் கல்வி, வாழ்க்கை, நாகரிகம் முதலியவற்றைச் சமய அருள் துறையின் வாயிலாகப் பல வகையாலும் உயர்த்

துங் திட்டம் திருமடங்கட்கு உண்டு. உண்மையிற், சமய வாழ்க்கைக்குத் தக்க கல்வியையும் வாழ்க்கையையும் நாகரிகத்தையும் மக்கட்கு உயர்ந்த முறையில் அளித்து மாட்சிமைப்படுத்துகின்றது. திருமடத்தின் அருட்டலைவர்களின் நேர்மையால் நாட்டின் நிலை எவ்வளவோ மேலோங்குதற்கு இடமுண்டு. திருமடங்களின் தலைமை மிகவும் பொறுப்பு வாய்ந்தது. ஆதீனத்தைச் சேர்ந்த திருக்கோயில்கள் பலவும் தக்க அருள்நேய மன்றங்களாக விளங்குதலோடு, தக்க கல்வி நிலையங்களாகவும், வாழ்க்கை வழிகாட்டிகளாகவும், நாகரிக அரண்களாகவும் திகழ்ந்து நலம் பயப்பதற்குரியனவாகும். சமய வாழ்க்கையின் முதல் நோக்கமானது, இக் கல்வி முதலியவற்றின் அடிப்படையின்மேலேயே இனிது நிறைவேறுதற்குரியது. சமய அருள் வாழ்க்கையைத் தாங்கும் தூண்கள் இவை என்பது பொருந்தும். அடிகளார் ஆட்சியில் இந் நன்னிலைகள் பலவற்றையுங் காண நாடு மிக்க ஆவலுடையதாயிருக்கின்றது.

அன்றியும், திருத் தருமையாதீனத்தின் சார்பில், சித்தாந்தத்தையும் தமிழையும் மிகவும் உயர்ந்த செவ்வியில் காத்து வளர்க்கும் தனிப்பெருங் கல்லூரி ஒன்றைத் தக்க இடத்தில் நிறுவி அடிகளார் நடைபெறச் செய்யவேண்டுமெனவும் அன்பர்கள் உறுதியான கருத்தோடு பெரிதும் எதிர்பார்க்கின்றனர். அடிகளார் திருவுள்ளங் கொள்வார்களாக.

எல்லாம் வல்ல அம்மையப்பர் திருவருளால் இவர்கள் தக்க திருமேனி திருவுள்ள நலங்களுடன் இனிது பெருவாழ்வு பெற்று விளங்கித், தமது பொறுப்பிலுள்ள இத் தென்றமிழ்ச் சைவ நன்னாட்டைப் பெரிதும் உய்வித்தருள்கவென வேண்டுகின்றனம். வாழி அடிகளார் திருவடிமலர்கள்!

**திரு. வி. க. மணிவிழாப் பாராட்டு:**

இருபதாம் நூற்றாண்டு, தமிழ்க்கு மேன்மேலும் ஆக்கம் விளைக்கும் காலமாகவே உயர்ந்து வருகின்றது. தமிழறிஞர்கட்கு விழா அயர்தலில் தமிழகம் வரவர ஊக்கங் கொண்டு வருகின்றது. திரு. வி. க. மணிவிழா, சென்ற திங்கள் இறுதியில் சென்னையிலும் பிற இடங்களிலும் ஆர்வத்தோடு நடைபெற்றி.

ருக்கின்றது. பெருமக்கள் பலரும் அவர்கள் மணிவிழாவிற் கலந்துகொண்டு தமிழ்க்குப் பெருமை அளித்திருக்கின்றனர். சென்னை நகராண்மைக் கழகமும் இம் மணி விழாவினைப் போற்றி, வாழ்த்து வழங்கியிருக்கின்றது. இதுகாறும் தமிழ் பெற்றிராத நலன் இது. திரு. வி. க. மணிவிழா, தமிழின் அணிவிழாவாகப், பலரையும் பிணித்த பெருவிழாவாக நிறைவேறி விளங்கினமை தமிழர் ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சி தருவதொன்று.

திரு. வி. க. அவர்களின் தொண்டு இனிமேலேதான் இன்னுஞ் சிறப்பெய்துதல் வேண்டும். அறுபதாண்டு வரையிற் 'கலங்கல் நிலை' என்ப; அதற்குமேல் 'தெளிவு நிலை' என்ப.

இதுவரையில் திரு. வி. க. அவர்களின் வாழ்க்கையில், தமிழூக்கம் பலர்க்கும் ஊட்டினமை, உருவான நற்றொண்டாகும். கருத்துக்களை வெளிப்படுத்துங் கருவியே மொழி என்பது. அக்கருவியை வளம்படுத்துவதிலும் அவர்கள் சேவை செல்லாமலில்லை. ஆயினும், கருவியைப் பலவாகப் பெருக்கிப் பலரையுங் கையாள வைப்பதிலேயே அவர்கள் சேவை பெருகிச் சென்றிருக்கின்றது. கருத்துக்களிலும் இங்ஙனமே கொள்ளலாம்.

மொழியும் கருத்தும் வாழ்க்கையை மாட்சிமைப்படுத்துவதற்குச், 'செயல்' இன்றியமையாதது. மொழியின் பரவுதலும் கருத்தின் பன்னுதலுமே மக்களை மக்களாக உருவாக்கிவிட மாட்டா. மொழியைப் பலவாகப் பயன்படுத்துவதிலும் கருத்தை உணர்ச்சியாக அடுக்குவதிலும் மேலானது, செயலைத் துறைபோக, நெறி நின்று, கடைப்பிடிப்பது. செயலாலேதான் கருத்துக்கும் மொழிக்கும் புதுமையும் வளமும் பொங்கிப் பொலிதல் வேண்டும். திரு. வி. க. அவர்கள் செயல், 'பொதுமை' என்னும் பெயரால், ஒன்றிலும் உயர்வாகவும் உருவாகவும் நடைபெறுமல் இதுகாறும் கலங்கலாகவே உள்ளது. நாட்டையுங் கலக்கி வருகின்றது. இவர்கள், பலர்க்கும் பெருக்கிய மொழியூக்கமானது, அவரவராலும் இங்ஙனம் கலங்கலின் பெருக்கத்துக்கே பெரும்பாலும் பயன்பட்டு வருகின்றது. பொதுமை இதுவன்று. நாட்டு மக்களைச் செயலில் உரங்கொள்ளச் செய்தற்கு

ஒரு நெறியும் துறையும் கடைப்பிடிப்பும் கட்டாயமானவை. அந்நிலை நின்று ஏனையவற்றிலும் அன்புடைமையே 'பொதுமை' எனப்பெறும். முன்னோர் பலரும் இங்ஙனமே வாழ்ந்து விளங்கிப் பெரும்பயன் விளைத்தனர்.

திரு. வி. க. அவர்கட்குத் தொண்டுள்ளம் உள்ளது. அவர்கள் நீடினிது வாழ்வோங்குதல் வேண்டும். வழிவழிப் பழியின்றி விளங்குதல் வேண்டும். இனி அவர்கள் தொண்டுகள் மேன்மேலுந் தெளிவு நிலை எய்தி நாட்டுக்கு ஆக்கமான வகையில் நெறி கடைப்பிடித்து இயங்குதல் நன்று. திரு. வி. க. அவர்களின் பொதுமை எண்ணமும் மொழிவன்மையும், பொது நிலையினின்றும் ஓங்கிச் சிறப்பு நிலையில் உயர்க. வாழி திரு. வி. க.

---

## திருத் தருமையாதீனத்தின் இருபத்து நான்காம் பட்டத்து மகாசந்நிதானம் அவர்களின் பத்தாம் ஆண்டு நிறைவு வாழ்த்து

இராகம், கல்யாணி; தாளம், ஆதி.

### பல்லவி

தருமையாதீனத் தலைவரின் ஆட்சியைப்
பெருமையுடன் புகழ்வோம் திருத் (தருமை)

### துணைப் பல்லவி

ஒருமை மனத்துடன் உளத்தினில் நினைந்திடில்
இருமையிலும் நமக் கின்பமளித்திடும் (தருமை)

### சரணம்

அருந்தமிழ் வாணர்க்கு அள்ளியே கொடுத்தும்
அறிவுக் கலைகளினை அமிழ்தென நினைத்தும்
வருந்தும் எளியோர்கள் வாழவே செய்யும்
வாலறிவன்றனை வாழ்த்தியே உய்யும் (தருமை)

தமிழரின் நன்மையைத் தமதென மதித்தே
தாய்மொழியாகிய தமிழினை வளர்த்தும்
அமைவுறும் அன்பினை அருளென நினைத்தே
ஆக்கமுடன் பல அறங்களைச் செய்யும் (தருமை)

—இசையரசு திரு. தண்டபாணி தேசிகர்.

---

# நமது தாய்மொழி

[நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்]

மக்கள் அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாத சாதனமா யிருப்பது பாஷை அல்லது மொழி என்பதே. மொழியே மக்களை மாக்களினின்று வேறுபடுத்துவதாகும். இப்பொழுது உலக மக்களால் எண்ணிறந்த மொழிகள் பேசப்படுகின்றன. எம்மொழி எவ்வினத்தவரால் வழி வழியாகப் பேசப்படுகின்றதோ அம்மொழி அவ்வினத்தவர்க்குத் தாய்மொழி என்று சொல்லப்படும். 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பதுபோல் ஒவ்வொருவர்க்கும் அவரவர் தாய்மொழி மதிப்பிற்குரியதே. தாய்மொழியிடத்துப் பற்றில்லாதவரும் மக்கள் எனத்தகுவரோ? ஆயின் மொழிகள் யாவும் ஒரு தன்மையின என்றாவது, ஒரே தகுதியுடையன என்றாவது கூறவொண்ணாது. இன்னமும் எழுத்துருவம் பெறாது பேச்சளவில் இருக்கும் மொழிகளும் உண்டு. எழுதப்பட்டும், பலவகைக் கருத்துக்களை வெளியிடுதற்கேற்ற சொற்கள் இல்லாதனவும், திருந்திய நிலை அடையாதனவும், போதிய இலக்கிய இலக்கணங்களைப் பெறாதனவுமாகிய மொழிகளும் உள்ளன. ஒரு மொழியின் திருந்திய நிலை, அதன் சொற்பெருக்கம், இலக்கிய இலக்கணங்கள் என்பவற்றிலிருந்தே அதனைப் பேசும் மக்களின் நாகரிக நிலையை அறியலாகும். ஆரியம், எபிரேயம், இலத்தீன், கிரேக்கம், தமிழ் என்னும் இவை பல்வகைப் பெருமையும் தொன்மையும் வாய்ந்த மொழிகள் என்பர். அவற்றுள், நூல் வழக்கிலன்றி உலக வழக்கிலும் தளர்ச்சியின்றி நடைபெற்று வருவது தமிழே.

நம் தாய்மொழியாகிய தமிழ் இன்ன காலத்தில் தோன்றியதென்று வரையறுக்க முடியாத அத்துணைப் பழமை வாய்ந்ததாகும். ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளின் முற்பட்ட சங்க இலக்கியங்களையும், அவற்றினும் முந்தியதாகிய தொல்காப்பியத்தையும் வைத்து நோக்குமிடத்துப் பல்லாயிரம் ஆண்டுகளின் முன்பே தமிழ் உயரிய நிலையை அடைந்துள்ளமை புலனாகின்றது. தமிழ் மிக்க இனிமையுடைய மொழியென்றும், இலக்கண வரம்புடைய மொழியென்றும் தொன்றுதொட்டுப் பல

ராலும் பாராட்டப் பெற்று வருகிறது. பழைய புலவர்கள் தமிழ் மொழியைக் குறிக்குமிடத்தெல்லாம் அதன் பெயரை வாளா கூறுது, செந்தமிழ், பைந்தமிழ், வண்டமிழ், ஒண்டமிழ், மென்றமிழ், இன்றமிழ் என்று இவ்வாருக யாதேனும் ஓர் சிறந்த அடைமொழி கொடுத்து வழங்கி வந்திருக்கின்றனர். கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பநாடர், தமது இராமாயணத்தில் அயோத்தி நகரைக் குறிக்குமிடத்தே, 'செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்றமிழிற் சீரிய கூரிய தீஞ்சொல், வவ்விய கவிஞ ரனைவரும் வடநூன் முனிவரும் புகழ்ந்தது' என்று பாடியுள்ளார். இதில் எவ்வளவு அடைமொழிகளால் தமிழ் சிறப்பிக்கப்பெற்றுள்ள தென்பதனைப் பாருங்கள்! குமரகுருபரர் என்னும் புலவர் பெருமான் தாமியற்றிய முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழில்,

> "கலைப்பால் நிறைந்த முதுக்குறைவிற்
> கல்விச் செல்வர் கேள்விநலம்
> கனியக் கனிய அமுதூறும்
> கடவுள் மறையும், முதற்சங்கத்
> தலைப்பா வலர்தீஞ் சுவைக்கனியும்
> தண்டேன் நறையும் வடித்தெடுத்த
> சாரங் கனிந்தூற் றிருந்தபசுந்
> தமிழும் நாற."

என்கிருர். தீஞ்சுவைக் கனியாம்! தண்டேன் நறையாம்! அவற்றை வடித்தெடுத்த சாரமாம்! அது கனிந்து ஊற்றிருந்த பசுந் தமிழாம்!! தமிழ் என்றவளவில் இன்ப வுணர்ச்சியானது அவருள்ளத்தே பொங்கித் ததும்பி வழிந்திருப்பதனை நோக்குங்கள். பழைய புலவர்கள் இருக்கட்டும்; நம்மனோர் கண்முன் விளங்கிய கவியாகிய சுப்பிரமணிய பாரதியார் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்குங் காணோம்' என்று பல மொழிகளோடு ஒத்துநோக்கி யறிந்த உண்மையை உரைத்துளாரன்றோ? தமிழ் இங்ஙனம் இனிமையுடையதா யிருத்தலாலன்றோ தமிழ் என்ற சொல்லுக்கே இனிமையென்ற பொருளும் உளதாயிற்று!! ஆனல் தமிழ் இனியது என்று பிறர் கூறக்கேட்டதனாலேயே அதன் இனிமை புலப்படமாட்டாது. கற்கண்டு சுவைமிக்கதென்று கேட்டவளவில் அதன் சுவையை உணர முடி

யுமா? அதனை வாயிலிட்டுச் சுவைத்து உண்ணும் பொழுதன்றோ அதன் இன்சுவை புலனாகும்! அதுவே போல், தமிழையும் பல காலும் கற்றும் கேட்டும் சிந்தித்தும் உரைத்தும் ஆராய்ந்தும் துய்க்கும் பொழுதே அதன் இனிமை மிகுதி புலனாவதாகும். தமிழ் தன் இனிமையால் கடவுளரையும் வயமாக்கும் இயல்பின தாதல்பற்றியே பரம்பொருளாய இறைவனைப் பாடி அவனரு ளைப் பெறுதற்குத் திருஞானசம்பந்தர் முதலிய நாயன்மார் களும், சடகோபர் முதலிய ஆழ்வார்களும், மற்றும் பட்டினத் தார், தாயுமானவர், இராமலிங்க அடிகள் முதலியபெரியோர்களும் தமிழையே கருவியாகக் கொண்டு பாடியுள்ளார்கள். அவர்கள் பாடிய அத் திருப்பாடல்களை இசையோடும் பொருளுணர் வோடும் இன்று நாம் பாடினும் அவை நம்மை இன்ப வெள்ளத் திலே திளைக்கச் செய்கின்றன.

தமிழ் அவ்வாறு இனிதாதற்குக் காரணம் அதன் மென்மை யும், எளிமையும், தெளிவும் முதலியனவாகும். தமிழ் மெய்யெழுத் துக்களில் வல்லெழுத்து என்ற ஒரு பிரிவு இருப்பினும், வேறு மொழிகளிலுள்ள சில எழுத்துக்களை நோக்கின் இவை மென் மையுடையனவே. அன்றியும் ஒற்றெழுத்துக்களும், டகரம் முத லிய உயிர் மெய்யெழுத்துக்களும் சொல்லின் முதலில் வாராதிருப் பதும், வல்லொற்றுக்களும் வேறு சில எழுத்துக்களும், இறுதி யில் வாராதிருப்பதும், சொல்லின் இடையிலும் சில எழுத்துக்களு டன் சில எழுத்துக்கள் கூடாதிருப்பதும் முதலியவெல்லாம் சொற்கள் மென்மையும் எளிமையும் உடையனவாதற்குக் காரண மாகின்றன. தமிழுக்கே சிறப்பாகவுள்ள ழகர எழுத்தோசை யானது மிக்க இனிமையுடையதொன்று. இங்கே குறிப்பிட்ட முதல் நிலை, இறுதிநிலை, இடைநிலை என்பனவும், சொற்கள் ஒன் றோடொன்று கூடும் சந்தியிலக்கணங்களும் ஆகிய வரம்பு சிதை யாமலே தமிழ் பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ச்சியுற்று வரு கிறது. அதனாலன்றோ,

"கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ!"

என்று திருவிளையாடற் புராண ஆசிரியர் இனிமையும் இலக்கண வரம்பும்பற்றி இம்மொழியைப் பாராட்டியுள்ளார்.

இனி, தமிழின் சிறப்பியல்பனைத்தையும் இங்கெடுத்துக் கூறுதல் நம் கருத்தன்று. இலக்கணத்தில் எழுத்துக்களுக்கு உயிர், மெய் என்று பெயரிட்டிருப்பதும், சொல்லையும் பொருளையும் உயர்திணை அஃறிணையென்று பாகுபடுத்தி யிருப்பதும் ஆகிய இவற்றிலிருந்தே தமிழ் மக்களின் பழைய நாகரிக நிலையையும் தத்துவ உணர்வையும் குறிப்பாக அறியக்கூடும். சங்க இலக்கியங்களாகிய எட்டுத் தொகை, பத்துப் பாட்டுக்களிலிருந்து அக்காலத்தில் கல்வி எவ்வளவு பரவியிருந்த தென்பதும், வேளாண்மை, வாணிகம், கைத்தொழில்கள் எங்ஙனம் ஓங்கியிருந்தன வென்பதும், அரசியல், சமய நிலை, ஒப்புர வொழுக்கம் என்பன எத்தகைய நன்முறையில் விளங்கின வென்பதும், மற்றும் தமிழர்களுடைய காதல், மானம், வீரம், வண்மை, நீதி, சான்றாண்மை முதலியனவும் நன்கு அறியப்படும். திருக்குறள் என்னும் தெய்வச் செழுந்தமிழ் மறையானது தமிழர் தனி நாகரிகத்தின் ஒப்பற்ற அடையாளம்; நாம் அறிய வேண்டும் பொருளனைத்தையும், எளிதில் அடையுமாறு திரட்டித் தந்து நமக்கு எய்ப்பினில் வைப்பாக விளங்குவது. சிலப்பதிகாரம், சிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம் முதலிய காப்பியங்களோ, ஒன்பான் சுவையும் பெய்துவைத்த சுவைப் பெட்டகங்கள். தமிழர் தம் தாய்மொழியிலுள்ள இவையனைத்தையும் கற்றுக் களிகூறுங் காலமே தமிழ்நாடு உயர்நிலை யடையுங் காலமாகும்.

நாம் இதுகாறும் நம் தாய்மொழியாகிய தமிழின் பழமை, இனிமை, இலக்கண வரம்புடைமை, அதிலுள்ள சிறந்த நூல்கள், அவற்றால் அறியலாகும் பொருள்கள் என்பனவற்றை ஒருவாறு கூறினோம். இனி, காலத்துக்குக் காலம் தமிழ் எங்ஙனம் வேற்றுமைகளையேற்றும் வளர்ச்சியுற்றும் வந்துள்ள தென்பதனையும், இனி நாம் கையாள வேண்டிய முறைகள் யாவை யென்பதனையும் சிறிது நோக்குவோம்.

உலகிலுள்ள யாதொரு மொழியும் தோன்றிய நாள்தொட்டு ஒரே தன்மையாய் இருந்து வருவதன்று. ஓர் குழவி பிறந்து

வளர்ந்து உயர்நிலையடைவது போன்றே மொழியும் தோன்றி வளரும் இயல்பினதாகும். அது வழக்காறற்ற நிலையை எய்தின் ஒருகால் அஃது ஒரே தன்மையை உடையதாகலாம். வழக்காறுடைய உயிருள்ள மொழிகள் யாவும் காலப் போக்கிற் கேற்ப வேறுபடுதல் இயல்பே. தமிழ் இவ்விதிக்கு விலக்கானதன்று.

தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் கிறு, கின்று, ஆநின்று என்னும் இடைநிலை பெற்ற 'செய்கிறான், செய்கின்றான், செய்யாநின்றான்' என்பன போலும் நிகழ்கால வினைகள் வழங்கவில்லை; பிற்காலத்தே அவை பெருவழக்காயின. முன்பு வழங்கிய செய்ம்மன என்னும் வாய்ப்பாட்டுச் சொல் பின்பு வழங்காது போய்விட்டது. அளபெடைகளும், செய்பு என்னும் எச்சமும், செய்கு முதலிய தன்மை வினைகளும் சென்றீ முதலிய முன்னிலை வினைகளும் முற்காலத்துப் பெருவழக்காயிருந்து பிற்றை நாளில் அருகிவிட்டன. மற்றும், பண்டு வழங்கிய எத்தனையோ பல திரிசொற்களின் உருவைப் பிற்கால இலக்கியங்களிற் காண்டலரிது. நான் என்னும் ஒருமைப் பெயரும், நாங்கள், நீங்கள், தாங்கள், அவர்கள் என்னும் பன்மைப் பெயர்களும் பிற்கால வழக்கே.

மரபுச் சொற்களில் பிள்ளை, குழவி என்ற இளமைப் பெயர்கள் பன்றிப் பிள்ளை, புலிப் பிள்ளை, முயற் பிள்ளை, நரிப்பிள்ளை எனவும், யானைக் குழவி, ஆன் குழவி, எருமைக் குழவி எனவும் பண்டு வழங்குவதற்குரியவா யிருந்தன. மக்களின் இளமைப் பெயராகக் குழவி, மகவு என்பனவன்றி, பிள்ளை என்னும் பெயர் அப்பொழுது வழங்கியதில்லை; பிற்காலத்தில் பிள்ளை என்னும் பெயர் பெருவழக்காயினமையைப் பிள்ளைத் தமிழ் என்னும் பெயரே உணர்த்தும். அப்பர் என்னும் பெயர் ஆட்டின் ஆணினையும், பாட்டி என்னும் பெயர் பன்றி, நாய், நரி என்பவற்றின் பெண்ணினையும், பிணா என்னும் பெயர் மக்களுக்குள்ளே பெண்ணினையும் பண்டு குறிப்பனவாயிருந்தன.

செய்யுட்களுள்ளே பண்டு நிலவிய பரிபாடல் என்பது பிற்காலத்தே அருகியது. முன்னில்லாத தாழிசை, துறை, விருத்தங்களாகிய பாவினங்களும், சந்தப் பாக்களும், பிறவும் பின்னர்த்

தோன்றி வளர்ச்சியுற்றன. பரணி, உலா, அந்தாதி, பிள்ளைத் தமிழ், கலம்பகம், மாலை, தூது முதலிய எத்தனையோ பிரபந்த வகைகளும், தலபுராணங்களும் பிற்காலத்தே தோன்றி வளர்ந்தன. இரண்டடியுள்ள தாழிசை, கண்ணி என்பனவற்றாலும் கீர்த்தனை முதலியவற்றாலும் சிற்சில பிரபந்தங்கள் தோன்றலுமாயின.

சமணம், புத்தம், கிறித்துவம், முகமதியம் என்னும் மதங்களின் கொள்கைகளும் அவ்வக் காலந்தோறும் தமிழில் வந்தேறின. பிறமொழிச் சொற்களையும் பொருள்களையும் தமிழ் வெறுக்கவில்லை. ஆசிரியர் தொல்காப்பியனாரே வழிநூல் வகையுள் மொழி பெயர்த்தியற்றுதலைச் சேர்த்தும், இன்றியமையாத வடசொற்களை எடுத்துக் கொள்ளுதற்கு விதி வகுத்துமுள்ளார். அவ்வாறே எத்தனையோ மொழிபெயர்ப்பு நூல்கள் உண்டாயின; வட சொற்களும் புகுந்தன. இராவுத்தர், சலாம், சபாசு என்னும் பிறமொழிச் சொற்களும் இலக்கியத்தில் ஏறின. மற்றும், அரேபியம், இந்துத்தானி, பாரசீகம், போர்த்துகேசியம், ஆங்கிலம் முதலியவற்றிலிருந்து தமிழ் மக்களின் பேச்சு வழக்கில் ஏறியுள்ள சொற்கள் நூற்றுக்கணக்காக வுள்ளன. ஆனால், அவையெல்லாம் உரையாடல்களிலும், ஆவணம் முதலியவற்றிலுமன்றி இலக்கியங்களில் ஏறிற்றில. இவ்வாறாக ஈண்டுக் காட்டியனவும் காட்டாதனவுமாகிய எத்தனையோ வேறுபாடுகள் ஒவ்வொரு காலப் பகுதியிலும் தமிழின்கண் நிகழ்ந்திருக்கின்றன.

ஆனால் தமிழின் வழிமொழிகளாகிய கன்னடம், தெலுங்கு, துளுவம், மலையாளம் என்பன வடவெழுத்துக்களையும் வடசொற்களையும், வடமொழி விதிகளையும் வரம்பின்றி யேற்றுத் தம் பழைய வடிவினை இழந்து நிற்றல்போலத் தமிழ் தனது தூய வடிவினை இழந்திலது; அடிப்படையான தனது இலக்கணத்தினின்று பிறழ்ந்துமிலது. இங்ஙனம் தமிழ்நங்கை காலத்திற் கேற்ற புதிய பணிகளைப் புனைந்தும், தன் இயற்கை யெழிலும் பண்பும் சிதையாமல் நடந்து வருதலினாலேயே கன்னியெனப் படுகின்றாள். ஆசிரியர் சுந்தரம் பிள்ளையின் "உன் சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே" என்ற அருமைப் பாட்டை நோக்குங்கள்.

பிறமொழிச் சொற்களை எடுத்துக் கொள்வது குற்றமின்றாயி னும், அவற்றை வரம்பின்றிப் புகுத்துவதானது, தமிழின் தூய் மையையும் அழகையும் சிதைத்து, அதன் தொன்றுதொட்டமாண் பினைக் கெடுப்பதாகும் என்பதனைக் கருத்திலிருத்தல் வேண்டும். இக்காலத்துப் புதிய கலைகள் பலவும் எழுதுதற்குச் சொற்கள் பல வேண்டுமென்பது உண்மையாயினும், அதன் பொருட்டுத் தமிழினைத் துருவியாராய்ந்து வேண்டுஞ் சொற்களைக் காண்டலும், அவை போதாவிடத்துத் தமிழ்ப் பகுதியினின்று புதிய சொற்களை ஆக்கிக் கொள்ளுதலும், இன்றியமையாதவழிப் பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொள்ளுதலுமே அறிவும் ஊக்கமும் முயற்சி யும் உடையார்க்கு அழகாவனவாம். அந்நெறியே, கலைப்பயிற் சியை எளிதாக்குவதுமாம்.

இனி, பிறமொழிச் சொற்களை இரவல் வாங்குமிடத்தும் அவற்றைத் தமிழியல்புக்கேற்ற ஓசையினவாகத் திரித்துக் கொள் ளுதல் ஆன்றோர் கைக்கொண்ட நெறியாகும். கல்வியிற் பெரிய வராகிய கம்பர் இலக்குவன் வீடணன் என்றிவ்வாறாக வட சொல்லுருவினைத் தமிழியல்புக் கேற்ப மாற்றியுள்ளமை காண்க.

கிறித்துவ வேத புத்தகத்தை மொழி பெயர்த்தோர் இயேசு, யோவான், யாக்கோபு என்றிங்ஙனம் தமிழியல்புக்கேற்பச் சொற்களைத் திரித்தமையால் அதன் பயிற்சிக்குக் குறைவுண்டா யிற்றில்லை. ஒவ்வொரு மொழியிலும் இவ்வியல்பு காணப்படும். ஆகவே, பிறமொழிகளிலுள்ளவாறே அச் சொற்களைத் தமிழில் வழங்கவேண்டு மென்பது நேர்மையாகாது.

இனி, கொச்சையாகவும் வழூப்படவும் பேசுவதனையே நல்ல நடையெனக் கொண்டாடி, அப்படியே எழுத வேண்டு மெனக் கூறுவார் சிலருமுளர்; அவ்வறிஞர்களே ஆங்கில மொழி யில் அவ்வாறு பேசுவதோ, எழுதுவதோ செய்தால் எவ்வகை மதிப்பினை யெய்தலாகும் என்பதனைச் சிந்தித்தல் வேண்டும். வாழைப் பழம் என்பது வானைப்பளம் எனவும், வாயப்பயம் எனவும், வாஷைப் பஷம் எனவும் ஒவ்வொரு பக்கத்தில் பேசப் படுகின்றது. இழுத்துக்கொண்டு என்பது இஸ்துக்கின்னு என்று

பேசப்படுகிறது. இவற்றையெல்லாம் இலக்கியத்தில் ஏற்றுக் கொள்ளுதல் எங்ஙனம்? சில விதிகளைத் தழுவி இயல்பாக மாறி வருகின்ற போலியும், மரூஉவும் முதலியன ஏற்றுக்கொள் ளத் தக்கவையே.

ஓர் ஆற்று வெள்ளத்தைக் குறுக்கே அணையிட்டுத் தடுத்து நிறுத்தல் கூடாதாயினும், அதன் போக்கிலேயே சென்று பாழாகாதபடி, கரைகோலி நேரிதிற் செலுத்தி, கணவாய்களின் வழியே நீரைப் பாய்ச்சிப் புலங்களை விளைவித்தல் அறிவுடைமை யாகும். அவ்வாறே மொழியினையும் சில வரம்புகளுக்குட்பட்டு வளரும்படி செய்து மக்கட்குப் பயன் விளைத்தல் வேண்டும்.

---

இராகம் - ஸகாரு] [தாளம் - ரூபகம்

### பல்லவி

ஒருகாலில் நெடுநாளாய் நிற்கின்ற தேனையா
உரைகடந் தொளிர்செம்பொ னம்பலத்தே மெய்யா (ஒருகாலில்)

### துணைப் பல்லவி

திருநாளைப் போவாருந் திருவாத வூராரும்போல்
சிறந்த தொண்டரைக் கண்டால் விழுங்கிக் கொளநினைந்தோ
(ஒருகாலில்)

### சரணம்

அடியார்மேல் வருங்கூற்றை அலற உதைக்கவோ
அரியபாற் கடல் இன்னும் சிறுவருக் களிக்கவோ
குடியான குயவர்பால் ஓட்டை யொளிக்கவோ
குட்டைக் கெடுத்துமறை வெட்டவெளி யாக்கவோ
(ஒரு காலில்)

தில்லைக்காளிக் கின்னமும் சினந்தோன்று திருக்கவோ
திருமாலம்பல வாயில் அகலாது கிடக்கவோ
தொல்லையுயிர் களையுன் தொடக்கினிற் படுக்கவோ
தூயபே ரின்பவீட்டில் மேவென விடுக்கவோ (ஒருகாலில்)

**வித்துவான் கோவை கு. நடேச கவுண்டர்.**

---

# திருக் கொடுங்குன்றமாகிய பிரான்மலை

[ஆதிநாத பிள்ளை]

(சென்னை இந்துமத அறநிலையப் பாதுகாப்பாளர் உயர்திரு. இராமச்சந்திரன் செட்டியாரவர்களுடன் சென்றது.)

26-6-1943 சனிக்கிழமை பிற்பகல் 4-மணிக்கு மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையின் 34-வது ஆண்டுவிழா உயர்திரு. இராமச்சந்திரன் செட்டியாரவர்கள் தலைமையில் தொடங்கி 8 மணிக்கு முடிவடைந்தது.

தலைமையுரையில், "பல கலைகளில், கல்வெட்டாராய்ச்சியும் வரலாற்று முறைகளும் சில. அவற்றையும் இக் கழகங்கள் வெளியிட முன்வரவேண்டும். கோயில்கள் தங்களிடமுள்ள கல்வெட்டையும், ஊர் வரலாற்றையும் வெளியிடுவதுடன் தமிழ்க் கல்லூரிகளை ஏற்படுத்த முன்வருமாயின் நாங்கள் ஏற்ற துணைபுரிவோம். தமிழ்நாட்டில் சென்னை, சிதம்பரம், அண்ணாமலைநகர், திருவையாறு, மேலைச்சிவபுரி, கரந்தைத் தமிழ்ச் சங்கம் முதலிய இடங்களிற்றான் தமிழ்க் கல்லூரிகளுள்ளன. ஆதீனங்களும் பெரும் வருவாயுள்ள கோயில்களும் முயன்றால் முடியாததன்று.

இவையேயன்றி விமானம் கோபுரம் அவற்றின் வேலைப் பாடுகள் உருவங்கள் அணிகள் கட்டிட வேலைகள் இவற்றையும் ஆராய்ந்து காலங்களை வெளியிடலாம். அவற்றிற்கேற்ற தமிழ்ச் சொற்களை வெளியிடலாம்" என்றார்கள். "வட்டமாகவுள்ள மாடம் தமிழ்நாட்டு வழக்கமெனவும், சதுரமாகவுள்ள மாடம் வடநாட்டதென்றும் கூறப்படும். தமிழ்நாட்டிலேயே இக் காலத்தில் எல்லா வகையான மாடங்களையும் காணலாம்" என்றார்கள்.

யானை முதுகு போன்ற மாடத்தைக் கஜப்பிரஷ்ட விமான மென்பர். அது பெண்ணாடத்திலுளது.

பெரிய புராணத்தில் சம்பந்தர் வரலாற்றைக் கூறும் கதுசு-ம் செய்யுள்,

" ஆங்கு நாதரைப் பணிந்துபெண்
 ணுடக மணைந்தரு மறையோசை
யோங்கு தூங்கானை மாடத்து
 ளமர்கின்ற வொருதனிப் பரஞ்சோதி
பாங்க ணைந்துமுன் வலங்கொண்டு
 பணிவுற்றுப் பாவுசொற் றமிழ்மாலை
தீங்கு நீங்குவீர் தொழுமின்க
 ளெனுமிசைப் பதிகமுந் தெரிவித்தார் "

என்று கூறுகிறது.

விழா முற்றுப் பெற்றதும் மகாமகோபாத்தியாய, பண்டித மணி உயர்திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் என்னை விழாத் தலைவரிடம் யாரென்றறிவுறுத்தினார்கள்.

முற்பகலிலேயே அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கும் பொழுது 'இவ்விடத்திலும் கல்வெட் டெழுத்துக்களை யாராய்ந்து வெளிப்படுத்த எங்களிடம் ஒருவருண்டு. அவருடைய ஆராய்ச்சியினால் மகிபாலன்பட்டிதான் கணியன் பூங்குன்றனாருடைய கவினுடைப் பூங்குன்றம் என்றறிந்தோம். நாலடி நானூற்றில் இரண்டு செய்யுட்களில் பூங்குன்ற நாட என்று இயம்பப்படுவதும் மகிபாலன்பட்டியேயாகும். அங்குள்ள சமணன் திடரிலே முக்குடைக் கீழச்சுதர், முற்றத்துறந்த முனிவருருவங்களுள்ளன.'

'கலைமகளென்னுந் திங்களிதழில் கட்டுரை யெழுதிக் கணியன் பூங்குன்றாரைக் காட்டியதைக் கண்டு பெரும்பேராசிரியர், டாக்டர். உ. வே. சாமிநாதைய ரவர்கள் பதித்த புறநானூறு மூன்றாம் பதிப்பில் அக் கட்டுரையைக் குறிப்பிட்டுப் பூங்குன்றந் தான் மகிபாலன்பட்டி யென்று புலவர் வரலாற்றில் பொருத்தமுற எழுதியிருக்கிறார்கள்' என்று சொல்லியிருந்தார்கள்.

அதற்கு விழாத் தலைவரவர்கள் 'அவருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவற்றைப் பல ஆண்டுகளாகப் பார்த்திருக்கிறேன். அவர் வந்தால் கண்டு பேச வேண்டு'மென்று கூறியிருந்தார்கள்.

இரவு 11-மணிக்கு மகிபாலன்பட்டியைப்பற்றி எழுதியிருந்த இரண்டு கட்டுரைகளையும் படித்தார்கள். அவர்களும் இத்துறையில் ஏற்றமான நல்லாராய்ச்சியுடையவர்களாகையால், 'யாதுமூரே' என்னும் பாட்டில்,

> கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
> நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்

என்ற அடிகளின் விரிவுரையில் கணியன் பூங்குன்றனார் கல்பொருதிரங்கும் மல்லற் பேர்யாற்றை மகிபாலன்பட்டியில் கண்டிருக்க மாட்டார்; யாதுமூரே என்பதனால் எல்லாவிடங்களுக்கும் சென்றுவரும்பொழுது மலைநாடுகளில் கண்டிருக்கலாம் என்றெழுதியிருப்பதைப் பார்த்தவுடன், மல்லற் பேர்யாறு யாண்டுளது? மலையாளத்திலுண்டு. அதனருகில் பூங்குன்னம் என்ற ஓரூரும் உண்டு. அதை இப்பொழுது புஷ்பகிரி என்று மாற்றியிருக்கிறார்கள். இப் பேர்யாறும் பூங்குன்றமும் அதுவா யிருக்கலாமா என்றார்கள்.

அடுத்தமுறை அங்குச் செல்லுங்காலத்தில் கல்வெட்டுண்டா, செப்பேடு இருக்கிறதா, அது ஒரு நாட்டின் பேரூரா, புன்குன்று என்ற பெயரிருக்கிறதா என்றெல்லாம் நன்றாய் ஆராய்ந்து தெரிவிக்கிறேன் என்றார்கள்.

பாண்டிய நாட்டிலுள்ள இவ்வூர், கல்வெட்டுண்மையாலும், சமணன் திடரிருப்பதனாலும், நாலடியில் 'பூங்குன்ற நாட' என்று பாடப்பெறும் இடமென்பதிலையமில்லை. பேர்யாற்றுப் பூங்குன்றம் ஒரு வேளை அதுவாயிருக்கலாமோ என்றையுற்றோம்.

தலைவரவர்கள் பிரான்மலை செல்லவேண்டுமென்ற பொழுது பெருஞ்சொல் விளக்கனார் சரவண முதலியாரவர்கள் எங்களிருவரையும் சேர்ந்து செல்லச் சொன்னார்கள்.

27-6-1943 காலையில் சென்றோம். வழியில் வண்டி ஏறியிழியும் கல் நிறைந்த இடங்களில் நடந்து சென்றோம். இயற்கைக் காட்சி இனிதாயிருந்தது. சம்பந்த மூர்த்திகளும் ஆயிரத்து முன்னூறு யாண்டுகளுக்கு முன்பு இவ் வழியாகத்தான் இவ்வூருக்குச்

சென்றார். ஒருநாள் மாலையில் நான்காம் பிறை மறையும்பொழுது "கூனற் பிறைசேர் கொடுங்குன்றம்" காணப்பட்டதனால் அவ்வாறு பாடுகிறார். சம்பந்தர் புராணத்தில் 628, 629-ம் செய்யுட்கள்,

"போர்நாடுஞ் சிலைமறவர் புன்புல வைப்பிடைப் போகிச்,
சீர்நாடு தென்பாண்டி நன்னாடு சென்றணைவார்."

"கானவதர் கடந்தணைந்தார் கொன்றைநறுஞ் சடைமுடியார்
மகிழ்ந்ததிருக் கொடுங்குன்றம்."

இப் பாட்டுக்களிலிருந்து மறவர் நாட்டையும் காட்டுப்பாதையையும் கடந்து கொடுங்குன்றம் வந்தது விளங்கும்.

சிலப்பதிகாரத்தில் பிறைமுடிக் கண்ணிப் பெரியோன் சூடிய அறைவாய்ச் சூலத்து அருநெறி மூன்று கொடும்பை நெடுங்குளக் கோட்டகத்தினின்றும் பிரிகின்றன, அவற்றுளொன்று இவ்வழி. கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளும் உறையூரிலிருந்து மதுரை செல்லும்போது கொடும்பாளூர் நெடுங்குளத்தைக் கடந்து பிரான்மலையிருக்கும் இவ்வழியாகத்தான் வந்தனர். ஓர்நாள் இங்குள்ள ஒரு காளிகோயிலிற் றங்கியதாகவும் இளங்கோவடிகள் கூறுவர். இவ்வளவு தொன்மையான புகழமைந்த வழியை யாமும் இப்பொழுது கடக்கிறோம் என்று பேசிக்கொண்டே இயற்கை யழகையும் மலைத் தோற்றத்தையும் மாண்புடன் பார்த்துச் சென்றோம்.

இன்னும் இது இராகவ ஐயங்காரவர்கள் கூறுகிறபடி பாண்டி மண்டலத்திலுள்ள பாரீச்சுவரமாயிருந்தால், தண்பறம்பு நன்னாட்டு முன்னூறு ஊர்களில் மேலைச்சிவபுரியும் ஒன்றாகும். கபிலர் "ஈண்டு நின்றோர்க்குந் தோன்றும் சிறுவரை சென்று நின்றோர்க்குந் தோன்றும்............தேர்வீ சிருக்கை நெடியோன் குன்றே" என்றும், "அற்றைத் திங்க ளவ்வெண்ணிலவின் எந்தையுமுடையேம் எங்குன்றும் பிறர் கொள்ளார், இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவின், வென்றெறி முரசின் வேந்தர் எம், குன்றுங்கொண்டார் யாம் எந்தையும் இலமே" என்று பாரி மகளிரும் பாடியது இம் மலையின் இத் தோற்றத்தைத்தான் என்றும் எண்ணினோம்.

வழியில் ஓர் குட்டையினருகில் 'அழகிய சொக்கன்' என்ற ஓர் இலிங்கத்தைக் கண்டோம். அது வலேயர் வழிபாட்டை யுடையதென்று உடன்போந்த சாமிநாத பிள்ளேயவர்கள் அறி வித்தார்கள். அப்பொழுது பிரான்மலேயும் (திருக்கொடுங்குன்ற மும்) வலேஞராகிய வேட்டுவர் வழிபாட்டைப் பெற்றிருந்ததாக வும் அதனுல் இன்றும் மலேமேல் உறையும் மங்கைபாகருக்கு உச்சிப்பொழுதில் தேனுந்தினேமாவும் படைக்கின்றன ரென்றும் வழங்குகிற ஓர் ஏட்டுச்சுவடியிலுள்ள செய்தியைக் கூறி னேன். அதைக் கோயிலுக்குச் சென்றதும் கேட்டுத், தேனும் திணேமாவும் படைப்பதை உறுதிசெய்து கொண்டார்கள்.

கோயிலுக்குச் சென்றதும், மேளதாளம் யானே பூமாலேகளு டன் கோயிலார் பார்க்க வந்தனர். அம்முறைகளெல்லாம் பெற நேரமில்லே. கோயிலேப் பார்த்துவிட்டுச் செல்கிருேமென்று உச்சி மலேக் கேகிஞேம். கல்லேக்குடைந்தாக்கிய குகைக் கோயிலுள், இறைவனும் இறைவியும் கைப்பற்றித் திருமணம் செய்த காட்சி யில் கல்லுருக்களேக் கவினுறப் புனேந்துள்ளனர். சம்பந்தர் வந்த பின்பு அல்லது வரும்பொழுது இவ் வேலே நடந்திருக்கும். கீழ்க் கோயில்தான் தொன்மையானது என்றுணர்ந்தோம். குடை வறை (குடைந்த அறை) யெல்லாம் ஏணிவைத்துச் சென்று நடு மலேயில் குடைந்திருப்பர். பிற்காலத்தில் சிலவிடங்களில், அது வரை படிகள் அமைத்துக் கட்டிடமும் கட்டினர் சில கோயில் களில் என்றறிந்தோம்.

ஆதிரையி லெழுந்தருளும் கூத்தரையும், உத்திரத்தில் தேரூ ரும் மாரியம்மனேயும், திருவாதிரைச் செடிலாட்ட இராட்டினங் களேயும் பார்த்துவிட்டு வைரவர் கோயிலேயும் காசி விஸ்வநாதர் விசாலாட்சியம்மையையும் கண்டோம். வைரவர் கோயில் வெளிப்புறக் கல்வெட்டொன்றில் துவராபதி வேளான் என் ெருரு பெயர் காணப்படுகிறது. இத் துவராபதி அம்மன், ஊர் யாவும் அருகிலுள்ள சுந்தரச் சருப்பெதி மங்கலத்திலுள்ளன என்று தெரிந்துகொண்டோம். இராகவ ஐயங்காரவர்கள் இத் துவராபதியையும் குறிப்பிட்டுப் பிரான்மலே வேள்பாரிக்குரிய தென்று வலியுறுத்துவார்கள்.

தொன்மையான கீழ்க்கோயிலுக்கு வந்து உக்கிரகிரீஸ்வரர் தேனம்மை இருவரையும் கண்டோம். கொடுங்குன்றம் உயர்ந்த

குன்று என்பதை உக்கிரகிரி என்று வடமொழியில் கொடிய மலையாக்கி விட்டனர். சிலம்பாறு = ஒலிக்கும் யாறு; இம் மலை யாற்றை 'நூபுர கங்கை' என்று வடமொழியில், காலணியாறு ஆக்கிய நினைவு தோன்றியது. செட்டியாரவர்கள் ஆடுசாபட்டியை அம்மையப்ப பிள்ளை அஜேந்திர மோக்ஷபுரியாக்கியதைக் கூறினார்கள்.

தேனம்மையார் கோயிலுக்கேகும் பொழுது அருவியூர்ச் செட்டியாரொருவரையும் அவர்களுடைய ஆசிரியரொருவையும் எதிரெதிரே கல்லில் தூணுடன் செய்து வைத்திருந்ததைப் பார்த்தோம். அம்மன் கோயிலுக்கெதிரே இடப்புறம் முருகன் கோட்டம் இருக்கிறது. அதன் எதிரே யானை வைத்திருக்கிறது. முருகனும் ஒரு கையில் மணிமாலையும் இடக்கையில் தாமரை மொட்டையும்பற்றி மயிலில்லாமல் நிற்கிறார். யானையைக் கண்டதும் இது முருகனூரும் பிணிமுகம் என்னும் யானை போலும், அலைவாய்க்குச் செல்லும் பொழுதும் அமருழக்கும் பொழுதும் முருகன் பிணிமுக மேறித்தான் செல்லுகிறார் என்று சொன்னதற்குப், பிணிமுகம் மயிலுக்குமாகும் என்று கூறினார்கள்.

சிலப்பதிகாரம், இந்திரவிழாவையும், காவிரிப்பூம் பட்டினத்தில் வெள்ளையானை, வச்சிராயுதம், கற்பக மரம் முதலியவைகளுக்குக் கோயில்களிருந்தன என்பதையும் கூறும். இங்கே ஐயனார் கோயில்களில் முன்புறம் யானையிருப்பதைக் காண்கிறோம். முருகனுக்கு யானை இருக்கிறது என்னவென்று வியந்தோம்.

1799-ல் கிழக்கிந்தியக் கம்பெனியார் பிரான்மலையைக் கைப்பற்றினர் என்று ஸ்காத்லந்துப் பத்திரிகையில் வெளியான செய்தியைப் புதுக்கோட்டை வரலாற்றில் குறித்திருப்பதை நினைவுறுத்தினேன்.

அவர்கள் பாண்டி பதினன்கு பாடல்பெற்ற ஊர்களில் இங்கேயும் திருப்பரங்குன்றிலேயும் குகைக்கோயில்களுள்ளன என்றார்கள். பாடலில் வாராத திருமெய்யத்தில் பெருமாள் கோயிலும் இறைவன் கோயிலும் அடுத்தடுத்துப் பாறையில் குடையப் பெற்றுள்ளன. திருக்குளக்குடி என்று கூறப்படும் மிதிலைப்பட்டிக்கருகிலுள்ள இடத்திலும் குகைக் கோயிலுளது என்றேன்.

திருவெள்ளறையிலுள்ள குகைக்கோயில் பாடலில் வருகிறது. 'வெள்ளறையில் கல்லறையுடன் நின்றாய்' என்று கூறுவர். அஃது இப்பொழுது காலியிடமாய்க் கிடக்கிறது. பாடல்பெற்றவிடத்தில் நாடி, வழிபாடு செய்யவில்லை என்றார்கள்.

எணிவைத் தேறி ஓர் குகைக் கோயிலில் வழிபாடு நடப்பதைப் பார்த்ததாகவும் கூறினார்கள்.

இப்படிப் பலவாறு பேசிக்கொண்டு நண்பகலில் மீண்டும் மேலைச்சிவபுரிக்கு வந்து சேர்ந்தோம்.

பிரான்மலைத் தம்பிரான் அவர்கள் மடத்தில் ஒரு மதில் சுவரில் எடுத்துவைத்துக் கட்டியிருக்கிற துண்டுக்கல்லில் கல்லெழுத்துண்டு. அதில் திருமேலாழீஸ்வரமுடைய நாயனார் என்றெழுதப் பெற்றுளது. இத் திருமேலாழீஸ்வரம் எது என்று தெரியவில்லை.

முற்காலத்தில் கோயில்கள் ஊராட்சி புரிந்து அறங்கூறி மக்களுக்குக் கல்வி கற்பித்து உழவும் தொழிலும் ஒருங்குயரச் செய்யுமிடங்களாயிருந்தன.

இப்பொழுது ஆடம்பர வாழ்வும், மக்களுள் ஏற்றத் தாழ்வும், பரத்தையர் பிழைப்பும், தூய்மையற்று அழுக்கும் இருட்டும் மரம் வளர்ந்து வெடித்துவிழும் நிலைமையிலுள்ள கன்மதில்களையும் கொண்டுள என்று பொதுவாகத் தமிழ்நாட்டுக் கோயில்கள் மடங்களின் நிலைகளை நினைந்து வருந்தினோம்.

நாம் தெரிந்து செய்யும் பிழைகள் பலவற்றுள் வழக்கம் பற்றி வந்து நலிபவை சில. 'அவை' முற்காலத்தில் கணவனிறந்தும் மனைவியரை உயிருடன் வேகவைத்தது போன்று கைம்பெண்வாழ்க்கை, கோயிலுள் உயர்வு தாழ்வு, அதைப் பார்த்து மக்களுள்ளும் ஏற்றம் இழிவு, மடங்களில் நாம் வைத்துக்கொள்ளும் துறவிகள், மரியாதை பெற வழக்காடும் துறவிகள், செல்வர் வறிஞர் வாழ்வு, ஆள்பவர் ஆளப்படுபவர், கைக்கூலி பெறும் அதிகாரிகள் முதலிய முறைகள், என்று கூறியதற்கு யாவும் படிப்படியாக இனிய நட்பு முறையில் மாற்ற முயல்வோம். இல்லாவிட்டால், மக்களாட்சியில் ஏற்படும் சட்ட முறையால் திருவாங்கூரைப்போல் ஒரே நாளில் மாறும்படி நேரும் என்றார்கள்.

# இயற்கையிற் காதல்

[வித்துவான் ஜி. சுப்பிரமணிய பிள்ளை M.A., B.L.]

உலகம் தோன்றிய நாள்முதல் மனிதன் இயற்கையோடு சேர்த்துப் பிணைக்கப்பட்டே வளர்ந்துவருகிறான். அவன் இயற்கையினின்றும் வேறாகத் தன்னை எண்ணுதல் இயலாது. ஒருவனைச் சுற்றிலுமுள்ள நிலவமைதியும், கால வேறுபாடும், மரம் கொடி முதலியனவும், உயிர்வாழ்வனவும், எல்லாம் இயற்கை என்பதனுள் அடங்குவனவாகும். மனிதனால் அறிந்தோ அறியாமலோ, அவனைச் சுற்றிலுமுள்ள இயற்கைப் பொருள்கள் அவனுடைய வாழ்க்கையை மாற்றி யமைக்கின்றன. அவற்றிற் கேற்ற உணர்ச்சிகளும் எண்ணங்களும் அவன் உள்ளத்தில் ஊறி நிறைகின்றன. மலைவளத்தினிடையே பிறந்து வளர்ந்த ஒருவனுக்கும் சமவெளியில் சஞ்சரித்துவரும் ஒருவனுக்கும், பண்பு, பயிற்சி, அறிவு, பழக்கவழக்கங்கள், ஒழுக்கம் முதலியவை ஒத்தனவாதல் அரிது. இதற்குக் காரணம் அவர்களைச் சுற்றி யமைந்துள்ள இயற்கை வேறுபாடுகளே யாகும். இன்னும், வெளியே காணப்படும் மாறுபாடுகளுக்கேற்ப அகத்தினுள் எண்ணங்களும் உணர்ச்சிகளும் மாறிக்கொண்டே வரும். சுற்றிலும் சாவும் துயரமும் காணும் ஒருவனுக்கு, அவன் மனம் எவ்வாறு குதூகலிக்கமுடியும்? எங்கும் வளமும், செல்வமும், அழகும், இன்பமும் காணும ஒருவன் மனம் மகிழ்ச்சியடைவது இயல்பே. அதே காட்சியை ஒரு மிடியன் தன்னைச் சுற்றிலும் கண்டு மனம் புழுங்கி ஏங்கவும் கூடும். இயற்கைக்கு மாறாகவும் மனிதன் நடந்துகொள்ள முடியாது. அவ்வியற்கையினிடமிருந்து மனிதன் அறிந்துகொள்ள வேண்டிய உண்மைகளோ எண்ணிறந்தன. நம் பண்டைப் புலவர்களின் பாக்கள் அனைத்தும் இயற்கைநலம் பொதுளி எழிலுற அமைந்து, மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை விழுமிதினெடுத்து விளக்கமுறுத்தும். அவற்றுட் சிறப்பாகக் காதலை இங்கு எடுத்துக் காணலாம்.

மக்களிடையே காதல் நிகழ்வதுபோல்; மக்களல்லாத பிற உயிர்களிடையும் காதல் விளைந்து கனிகின்றது. பறவைகளும்

விலங்குகளும், ஆணும் பெண்ணுமாய்ப் பேணி விழைந்து, மாசற்ற மனக்காதல் மகிழ்வூட்ட, இன்பம் பெருக்கி இனிது வாழ்கின்றன. ஒன்றினோடொன்று அன்பு காட்டி விளையாடுவதும், கூடிக் கூடிக் கசிந்துருகிக் களிப்பெய்துவதும், ஓவென்றொலிப்பதும், உர் என்று பாய்வதும், இருதலைப்புள்ளின் ஓருயிராவதும், ஆவென்றலறி அன்போடணைப்பதும், குலாவிப் பறந்து கூடமைப்பதும், முட்டையிட்டுக் குஞ்சு பொறிப்பதும், குட்டியைத் தழுவிக் கொஞ்சித் திளைப்பதும், ஆன் கனைப்புக் கேட்டு மழக்கன்று துள்ளுவதும், கன்றுமுட்டிக் காலி சுரப்பதும், கண்டோர் மனதைக் கவர்ந்துருக்கும் காட்சி யன்றோ! இத்தகைய காட்சிகள் மக்களின் மனப்பான்மைக் கேற்றவாறு வெவ்வேறு உணர்ச்சிகளை ஊட்டவல்லன. முற்றத் துறந்த முழுஞானிகள் இவற்றினிடையே இறையொளி கண்டு விம்மித மெய்துவர். அப்பர் பெருமான் திருவையாற்றில், காதல் மடப்பிடியோடு களிறு வருவன கண்டும், இளமண நாகு தழுவி ஏறு வருவன கண்டும், திருக்கயிலாயக் காட்சி யெனவே போற்றிக் கைகுவித்து வாயார வழுத்தி நின்றார். ஆனால், இளங் காதலர்கள் எவ்வாறு கொள்வார்?

இளவேனிற் காலத்தில், சோலைகள் மலருடுத்து, சுந்தரப் புன்முறுவல் காட்டுகின்றன. பொழிலில் மரங்கள் பூத்துக் காய்த்துப் பொலிவூட்டுகின்றன. இவை பறவைகளுக்குத் தேக்கிடும் பெருவிருந்தளிக்கும். செங்கணிருங்குயில் சேவலும் பெடையுமாய் எதிர்கூவி மரக்கிளைகளில் இன்னிசை யெழுப்பி இன்பமுறுத்தும். ஆனால் தனியுற்ற மாதரார் தத்தளித்துத் தலை மயங்குவர்.

“அடைகரை மாஅத் தலகுசினை யொலியத்
தளிர்கவின் எய்திய தண்ணறும் பொதும்பிற்
சேவலொடு கெழீஇய செங்க ணிருங்குயில்
புகன்றெதிர் ஆலும் பூமலி காலையும்
அகன்றோர் மன்றநம் மறந் திசி னோரென.” (நற்றிணை-118)

பனிக்காலத்தில், குரவமரங்கள் கொழுந்துவிட்டுப் போதரும்பிப் பொலிவெய்தும். கொஞ்சும் குயில்கள் கூடிமகிழ்ந்து

ஒன்றையொன்று ஏறட்டுக்கொண்டு மதுரகானம் பொழிந்து மனதை மயக்குறுத்தும். தனித்தியலும் பெண்ணியலார் கோலக் குயிலாலும் குரலினிமையிலும் ஒருபொருள் கண்டு உடல் நைந் துருகுவர். அக் குயில் கூவுவது, "கூடி மகிழ்ந்தோரே! எங் களைப்போல் இன்னும் கூடி இனிதுறைவீர்!" என்று கூறுவது போலத் தோன்றுமாம். இயற்கை முழங்கி இவ்வாறு ஆர்ப்பரித் தால் இல்லுறையும் மெல்லியலார் பிரிந்து சென்ற கணவரை யெண்ணிக் கருத்தழியாது மற்றென் செய்தல் கூடும்?

"அன்பினர் மன்னும் பெரியர் அதன்றலைப்
பின்பனி யமையம் வருமென முன்பனிக்
கொழுந்து முந்துறீஇக் குரவரும் பினவே
புணர்ந்தீர் புணர்மினோ வென்ன இணர்மிசைச்
செங்க ணிருங்குயில் எதிர்குரல் பயிற்றும்
இன்ப வேனிலும் வந்தன்று நம்வயிற்
பிரியல மென்று தெளித்தோர் தேஎத்து
இனியெவன் மொழிகோ யானே." (நற்றிணை-224)

காதலர்க்குக் குயில்கள் இப்பொருள் படக் கூவுதல் மன்மதனின் கட்டளையினாலேதான், என்று இளங்கோவடிகளும், "ஊடினீ ரெல்லா முருவிலான் றன்னாணை, கூடுமி னென்று குயில்சாற்ற" என்னும் பாடலில் இனிது விளக்கியுள்ளார்.

கார் காலத்தில், மடப்பிணையைத் தழுவி, பெரிய கழுத்தை யுடைய இரலைமான் வேலமரத்தின் தாழ்நிழலில் உடனுறையும் உளங்கவர் தோற்றம் கண்டு, பிரியக்கருதிய ஆடவரும் பிரிவை மறந்து மனைவியரோடு மனமகிழ்ந்துறைவர் என்பதை,

"கார்பெயல் செய்த காமர் காலை
மடப்பிணை தழீஇய மாவெருத் திரலை
காழ்கொள் வேலத் தாழ்சினை பயந்த
கண்கவர் வரிநிழல் வதியுந்
தண்படு கானமுந் தவிர்ந்தனஞ் செலவே." (நற்றிணை-256)

என்னும் அடிகளால் நன்கறியலாம்.

ஒரு காதலன் தன் காதலியைப் பிரிந்து, பொருளீட்டிவர எண்ணி, வெம்பி யுலர்ந்த வெஞ்சுரத்தின் வழியே சென்று

கொண்டிருந்தான். அவ்விடத்தில் மான் கூட்டங்கள் அங்கு மிங்கும் ஓடி, இரைதேடி அலைந்துகொண்டிருந்தன. அவற்றுள் ஒரு கலைமான் ஒரு நெல்லிமரத்தி னடியில் ஒதுங்கியது. அந்த ஆண்மானுக்குக் கொம்புகள் இரண்டும் அறுபட்டுத் தொலைந்த தால் அப்பொழுதுதான் மறுகொம்பு வளர்வதற்காகத் தலையில் இளங் குருத்துகள் முளை தோன்றியிருந்தன. அம் முளைகளை மெல்லிய தோல் மூடிக்கொண்டிருந்தது. அந்நிலையில் அவை அதிர்ச்சியுற்றால் அந்த மான் புண்ணுயுலைந்து பெருவேதனை யுறும். அதனால் வாயைத்திறந்து அதிக ஓசையிடுதல் கூடாது. வாயைத் திறந்து கத்தினால் கொம்பின் முளைகள் அசைவுற்றுப் பெருந் துன்பம் விளைப்பது திண்ணம். இவ்வளவு துயரத்துக்கிடையே வருந்திக்கொண்டிருந்த அக் கலை தித்திப்பான திரண்ட நெல்லிக் கனிகள் அம் மரத்தினடியில் உதிர்ந்து கிடப்பதைக் கண்டது. அவற்றைத் தானேயருந்தி இனிது பசிதீர்க்கலாம். ஆனால் அது அவ்வாறு செய்யாமல், தன் பெண்மானை நினைத்துக்கொண்டது. வெயிலில் வதங்கி வருந்தி யுழலும் தன் பிணை, நெல்லிக் கனி யென்றால் வயிறார அருந்தி வெம்மைதீர்ந்து இன்புறுமே என்ற எண்ணம். பெண்மானோ நெடுந்தொலைவில் மேய்ந்துகொண்டு நின்றது. அதைத் தன் அருகில் அழைத்து நெல்லிக் கனிகளை அளிக்கக் கருதி, கொம்புகள் வலியெடுப்பதையும் பொருட்படுத் தாது, அத் தோல் பொதிந்த கோட்டின் முளைகள் அதிர்ச்சியுறும் படி கூவி யழைத்தது. இத்தகைய சிற்றுயிரிடத்தும், தன் துயர் காணாது, காதலாகிக் கசிந்தூறும் பேரன்பின் பெருமை இருந்த வாறென்னே! என்னே!! இதைக் கண்டான் அத் தலைவன். “ஆகா! இவ் விலங்குகளிடையும் இத்தன்மையான தூய அன்பு நிகழக் கண்ட யான், அவற்றைவிடச் சிறந்த அறிவு படைத்திருந் தும், என் துணைவியைத் துயருழக்க நீத்துத் தனியே இங்கு வந்தது என்ன பேதைமை?” என்று வருந்தினான். அப் பொழுது, மணம் நாறி மனங் குழைக்கும் மலர்க் கூந்தலுட னும், மெல்லிய திரண்ட தோள்களுடனும், அகமுருக்கும் அஞ் சனவிழி காட்டி, அவன் துணைவி அவன் மனக்கண்முன் தோன்றி நின்றாள். இங்ஙனம் இயற்கையின் நிகழ்ச்சியை எடுத்துக் கூறி மாந்தர்க்கு நல்லுரை நவிலும் பாட்டு வருமாறு:—

"சிறியிலை நெல்லித் தீஞ்சுவைத் திரள்காய்
உதிர்வன தாஅம் அத்தந் தவிர்வின்று
புள்ளி யம்பிணை யுணீஇய வுள்ளி
அறுமருப் பொழித்த தலைய தோல்பொதி
மறுமருப் பிளங்கோ டதிரக் கூஉஞ்
சுடர்தெற வருந்திய அருஞ்சுரம் இறந்தாங்கு
உள்ளினை வாழிய நெஞ்சே போதெனப்
புலங்கமழ் நாற்றத் திரும்பல் கூந்தல்
நல்லெழில் மழைக்கணம் காதலி
மெல்லிறைப் பணைத்தோள் விளங்குமாண் கவினே."

(அகநானூறு-291)

## இயற்கை யழகு

[இயற்கை]

மலையே யாறே வானமே
மதிக்கும் இனிய வெண்ணிலவே
உலையா உள்ளப் பறவைகளே
ஊக்கங் குறையா மாவினமே!
நிலையா விளங்கும் விண்மீனே
நீடும் நறிய மலர்வகையே
அலகில் பெருமைக் கடவுள்நிலை
அறிந்தீர் போலும் அருளீரே! (1)

[மனம்]

இயற்கை யழகுக் கொடிமீதே
இயலும் மனமாஞ் சிறுகுருவி
செயற்கை மறந்தே இனிதிருந்து
தெய்வக் கருணைத் திறம்பாடி
உயற்கை வேண்டித் தழுதழுத்த
உளமும் நிலையும் பரவசமாய்
உயிர்க்கும் அமுதத் தீங்குரல்கேட்
டன்பு பெருகார் யாரேயோ! (2)

[மலைவனம்]

ஓங்கி யுயர்ந்தே பசியநிற
உடலங் காட்டி வன்மைகொடு
பாங்கி னுயரும் வனவிலங்கும்
பறவை யினமுங் களித்துலவத்
தாங்கி யன்பா றொழுக்கிமுகில்
தழுவப் பலநல் வளஞ்சுரந்தாய்
தூங்கா மலையே இறைவனருட்
சொருபப் பெருமை சொல்லாயே! (3)

— கிளிக்காட்டு - இறையோளியன்

# செழுமைக்குரிய பண்டை இந்தியக் கடவுள்*

[வித்துவான் மா. இராசமாணிக்கம் பிள்ளை, B. O. L.]

சிந்துவெளியிற் கிடைத்த பண்டை இந்தியர்தம் சிறந்த கடவுளாகிய 'ஆன்' செழுமைக்குரிய கடவுளாகும். ஒரு கல்வெட்டில், 'பேரானது தேர், உயர் கதிரவன், பயிர் நிலங்கள்' என்னும் தொடர் காண்கிறது. தென்னாட்டில் 'பேராள், பேரான்' என்பது சிவனைக் குறிப்பது. தேரும் வயல்களும் முறையே போரையும் சமாதானத்தையும் குறிப்பன; அறிவை யும் தோற்றத்தையும் குறிப்பன. 'ஆன்' என்னும் கடவுள் பெரும்பாலும் மரக்கிளைகளிற் காட்டப்படலே அதன் செழு மைக்குரிய பண்பை உணர்த்துகிறது.

'ஹரப்பாவில் கிடைத்த முத்திரை ஒன்று நீள் சதுரமா னது. அதில் பல உருவங்கள் காண்கின்றன. அவற்றுள் ஒன்று பெண் உருவம். அஃது ஆடை அற்றது; தலைகீழாகக் கால்களை அகற்றிக்கொண்டு தொங்குகிறது. அதன் வயிற்றி லிருந்து ஒரு செடி வெளிப்படுகிறது. அதற்குப் பக்கத்தில் சில ஓவிய எழுத்துகள் இருக்கின்றன. அவற்றுக்கு அப்பால் இரண்டு நூதன விலங்குகள் நிற்கின்றன. முத்திரையின் பின் புறம் முன்சொன்ன எழுத்துகளோடு ஓர் ஆணும் பெண்ணும் நிற்பதாகக் காண்கின்றனர். ஆடவன் தன்கையில் கத்தி ஒன்றை வைத்துள்ளான். பெண் தரையில் உட்கார்ந்தபடி கைகளைக் குவித்து உயர்த்தியுள்ளாள். ஆடவன் அப் பெண்ணைத் **தரைப் பெண்**ணுக்குப் (நிலமகள்) பலியிடுபவன் போலும்! முதற் பக் கத்தில் தலைகீழாகத் தொங்கும் பெண் உருவம் **தரைப்பெண்** உரு வம்; இரண்டு விலங்குகள் அத் தெய்வம் ஏறும் ஊர்திகள்போ லும்!' என்று சர் ஜான் மார்ஷல் கூறியுள்ளது, பெண் தெய்வம் பொறுத்தமட்டில் பொருத்தமற்றதாகும். அஃது ஆன் உரு

* 'A Proto - Indian Representation of the fortility God என்று ஹீராஸ் பாதிரியார் ('Acharya Pushpanjali volume'— in honour of Dr. D. R. Bhandarkar) எழுதிய கட்டுரையின் சுரு. (pp. 121—130)

வமே என்பது வேறு பல முத்திரைகளைக் கொண்டு அறியலாம். இத்தகைய பல முத்திரைகள் எகிப்து, பாபிலோனியா, மினேவா, சுமேரியா என்னும் இடங்களிற் கிடைத்துள்ளன.

இந்த ஆண் உருவத்தின் கால்கள் வில்லைப்போல் வளைந் திருக்கும்; குறி (membrum) முன்புறம் கால்களுக்கிடையே நீண்டிருக்கும்; ஆடையே இல்லை. முகம் சில இடங்களில் பக்கப் பார்வையில் இருக்கும்; பல இடங்களில் நேராக இருக்கும். இரண்டு தாமரைத் தண்டுகளை வளைத்து அவற்றை ஆசனமாக்கி உட்கார்ந்த கோலமும் உண்டு. இக் குறி 'இது செழுமைக் குரிய கடவுள்' என்பதற்குப் பின்னுமொரு சான்றாகும்.

வான் டெர் ஆஸ்டென் என்பவர் இதனைப் 'பெஸ் (Bes) என்னும் கடவுள்' என்பர். இது எகிப்தியக் கடவுள்; இசை வளர்க்கும் கடவுள், மகிழ்ச்சிக்கும் பிள்ளைப் பேற்றுக்கும் உரிய கடவுள். இக் கடவுள் எகிப்தில் இருமுறைகளில் காட்டப் படும்: ஒன்று, குறுகிய வண்டிக் கால்களைக் கொண்ட குள்ள மாகவும் தலையில் வரிசையான இறகுகளை உடையதாகவும் இருப் பது; மற்றொன்று இக் கடவுள் சிங்க வுருவத்தைப் பெற்றிருந் தமை - பல உருவங்களில் இக் கடவுளுக்குக் காதுகள், பிடரி மயிர், வால் இவை இணைக்கப்பட்டிருக்கும்—சிலவற்றில் அவ் விலங்கின் தோலைப் போர்த்தபடி இருக்கும். பழைய எகிப்திய முத்திரை ஒன்றில் இக்கடவுள் மொஹெஞ்சொதரோவில் காட் டப்பட்டபடியே இருக்கிறது. இதன் ஒவ்வொரு கையும் ஒரு பாம்பைப் பிடித்துள்ளது. அப் பாம்புகள் இதன் கால்களைச் சுற்றிக்கொண்டுள்ளன. இத்தகைய முத்திரைகள் மெஸபொ டேமியா, கிரீட், சிந்துவெளி, எகிப்து இவற்றில் கிடைத்துள் ளன. இக் கடவுளின் கால்களுக்கிடையுள்ள நீண்ட குறியுடன் நாற்கால் மூட்டைப்பூச்சி போன்ற ஒன்று நீண்ட வாலுடன் இணைக்கப்பட்டுள்ளது. இப் பூச்சி பல முத்திரைகளில் காண் கின்றன. அதன் தலைப்புறத்தில் இரண்டு நீண்ட நரம்புகள் உள்ளன. இப் பூச்சியுள்ள முத்திரை 1930-ல் சுமேரியாவிலும் கிடைத்தது. இது பல விலங்குகட்கு இடையில் இருக்கிறது. இது சில முத்திரைகளில் சதுரமாக இருக்கிறது. இதன் குறிப்பு என்ன?

இது எகிப்திய வண்டைக் குறிப்பது. 'வண்டு மண் உருண்டையை உருட்டிக்கொண்டு செல்லும். அதுபோலக் கதிரவன்—ஆக்கத்திற்கும் செழுமைக்கும் உரிய முதற்பொருள் நாளும் விண்ணில் உருள்கிறது' என்பதைக் குறிப்பதாகும். காலைக் கதிரவன் இந்த வண்டாகவே பழைய எகிப்தில் காட்டப் பட்டது; பேசப்பட்டது. (எகிப்தில் கதிரவன் பெயர் ரா)........ ...............இங்ஙனம் எகிப்தில் வண்டு செழுமைக்குரிய குறியாக வும், மறு பிறப்பை உணர்த்தும் குறியாகவும் உணர்த்தப்பட் டது. இக் குறிப்பாற்றான் மேற்சொன்ன கடவுள் குறியிடத்தும் இது இணைக்கப்பட்டது.

பெஸ் என்னும் கடவுள் பாம்புகளைப்பற்றி இருப்பதன் கருத்து என்ன? திராவிடக் கடவுளான சிவன் பாம்புகளைப்பற் றிக்கொண்டு இருப்பவன். அழித்தற் கடவுளாகிய நிலையில் அவ னிடம் உள்ள பாம்பு அழிவைக் குறிக்கும் அடையாளம் ஆகும். பிற்காலச் சிவனைக் குறிக்கும் சிந்துவெளி 'ஆன்' கடவுளிடமும் பாம்பு இருக்கிறது என்பதை, 'மீன் எண் மூன்(று)கண் பவ்" (வணக்கத்திற்குரிய ஒளியுள்ள முக்கண்ணன் பாம்பு) என்னும் முத்திரை எழுத்துகள் உணர்த்துகின்றன. ('பண்டை இந்தியர் 'கடவுள் முக்கண்களை உடையவர்' என்று நம்புகின்றனர். சிவனும் முக்கண்ணனே.) அழிவுக்குப் பின் தோற்றம் என்பது முறையாதலின் பாம்பைக் கொண்டுள்ள 'ஆன் அல்லது பெஸ்' கடவுள் அழித்தற் கடவுள்; அழித்தற்குப் பின் தோற்றம்—செழுமை உண்டாக்கும் கடவுள் ஆகிறதன்றோ? இப் பண்டைப் பொருளிலிருந்தே 'இன்பநுகர்ச்சி, மகிழ்ச்சி, பிள்ளைப்பேறு' என்பன பின் தோன்றலாயின. பிற்கால எகிப்தர் வரலாற்றிலும் இக்கடவுள் இதே குணங்களைக் கொண்டுள்ளது. இதனாற்றான் இது மணப்பள்ளியின் கால்களை அலங்கரித்தது; எகிப்திய அரசி 'ஹட் செப்சட்' பிறந்த அறையில் இக்கடவுள் உருவம் வைக் கப்பட்டிருந்தது. எகிப்தியர் கோவில்களில் உள்ள பிறப்பறை களில் எல்லாம் இக்கடவுள் உருவம் இருந்தன; இராணிமார் அறைகளில் இருந்தன. **இக்கடவுள் எங்கிருந்து வந்தது?**

எகிப்தியர் கடவுளர் பெரும்பாலும் பக்கப்பார்வை யுடைய ராகவே வரையப்பட்டனர். இக்கடவுள் மட்டும் நேர்ப்பார்வை

உடையராகவே வரையப்பட்டது. மேலும், முற்சொன்னவை ஓரளவு ஆடை உடையனவாகவே இருக்கும். பிற்பட்டதோ யாண்டும் ஆடை அற்றதாகவே காண்கிறது. எனவே, கடவுளரை ஆடையற்றவராக வழிபடும் நாட்டிலிருந்தே இக்கடவுள் எகிப்துக்குச் சென்றதாதல் வேண்டும். அஃது எந்த நாடு?

பண்டை எகிப்திய உருவங்களில் இக் கடவுள் கூரிய தாடியும் பிடரி மயிரும் உடையதாக இருக்கிறது; சுமேரிய—பாபிலோனிய முத்திரைகளில் தட்டையான உருண்டைக் குல்லாயை அணிந்திருக்கிறது; ஓரிடத்தில் பூங்கொத்துடைய தட்டொன்றைத் தலைக்குமேல் பிடித்துள்ளது; பெரும்பாலும் இதன் கைகள் இரண்டும் ஒரே அளவில் வைக்கப்பட்டில்லை; முகம் பக்கப் பார்வை கொண்டது; உடல் நேரே உள்ளது.

இக்கடவுளின் பல திறப்பட்ட உருவங்களிற் பழைமையும் எளிதுமானது சிந்துவெளியிற் கிடைத்த பண்டை இந்திய உருவமே ஆகும். இதில் தாடி இல்லை; பிடரி மயிர் இல்லை. இந்தியப் பழங் கடவுளர் உருவங்கள் ஆடையற்ற நிலையிலேயே உள்ளன. இவை அனைத்தும், பெஸ்ஸின் பிறப்பகம் இந்தியா என்பதைத்தான் குறிக்கிறது. சிந்துவெளியிற் கிடைத்த 'ஆண்' கடவுள் காலடியிற் காணும் மூட்டைப்பூச்சியின் வளர்ச்சியே 'பெஸ்' கடவுளிடம் காணும் வண்டு என்பதும் இதனை உறுதிப்படுத்துதல் காண்க.

'பெஸ்' என்னும் விலங்கின் தோல் போர்த்துள்ளதால் இக் கடவுள் இப் பெயர் பெற்றனர் என்பர். அது தவறு, என்னை? தோல் போர்த்தது பிற்காலத்தில் ஆதலால் என்க. இதற்கு உண்மையான பொருள் காணவேண்டுமாயின் **திராவிட மொழிகளிற்றான் தேடவேண்டும்.**

**பெஸ்**—பகுதி

**பெஸல்**—பிறப்பு, உண்டாதல், பிள்ளைப்பேறு (கன்னடம்)

**பேஸாய**—பயிர்த்தொழில், விவசாயம் (துளுவம்)

**பெஸி**—பறவையின் மூட்டை (சிங்களம்)

எனவே, பெஸ் என்பது 'உண்டாக்கல், படைத்தல்' முதலிய பொருள்களைக் குறித்த பகுதியாக முதலில் இருந்திருத்தல் வேண்டும். ஆதலின், ஏபஸ் என்பது உண்டாக்கும் கடவுளைக் குறித்தமை இயல்பே என்க.

எகிப்தில் வழக்கொழிந்த கடவுளர் பலருள் பெஸ் ஒன்று கும். ஆனால் சிந்துவெளியில் இது முழுமுதற் கடவுளாக இருந்தது. வேறு பெருங் கடவுள் இல்லை. இதுவே பழைய இந்தியர் கடவுள் ஆகும். இதன் பல்வேறு உருவங்கள் பிற்பட்டனவாகும். பெஸ் பன்டிலிருந்து எகிப்திற்கு வந்ததாக எகிப்தியர் கூறுவர் என்று வாலிஸ் பட்ஜ் கூறுகிறார். எகிப்தியர் பன்டில் பல ஆண்டுகள் இருந்தவராதலின் தம் பழைய நாட்டையே மறந்து விட்டனர். சிந்துவெளி முத்திரைகளை நன்கு ஆராயின், எகிப்தியரது பழைய இடம் இந்தியாவே என்பது விளங்கும். இங்கிருந்து போனபொழுது அவர்கள் தங்கள் கடவுளான பெஸ்ஸை யும் உடன்கொண்டு சென்றனர்.

முன்சொன்ன பெண்பலித் தொடர்பான முத்திரையில் உள்ள ஓவிய எழுத்துகள், 'நிலாத்தோன்றிய எட்டாம் நாளில் கிராமவேந்தன் எடுபதி நீதி' என்பதைக் குறிக்கின்றன. முத்திரையில் உள்ள ஆடவன் கடவுள் அல்லது கடவுட் புரோகிதன் அல்லது கிராமத்தலைவனாக இருத்தல் வேண்டும். அட்டமி (எட்டாம்) நாள் நடைபெறும் செயல் இது. இங்குக் கோகுல அட்டமி கொண்டாட்ட நாள் என்பது நினைவுகூரற்பாலது. 'என்ம' என்பது துளுவில் இன்றும் எட்டைக் குறிக்கிறது. முத்திரையில் குறித்துள்ளது உயிர்ப்பலியாகும். ஆனால் இது நீதி எனப் பட்டதேன்?

முத்திரையின் ஒரு பக்கத்தில் உள்ள பெஸ் எனும் ஆண் கடவுள் செழுமைக்குரியது. மறுபக்கமுள்ள பெண் செழுமையை வேண்டினாள்; பெற்றிலள். அவள், பண்டைக்கால எண்ணப்படி, வாழ உரிமை அற்றவளானாள்.

# சங்ககாலத்துச் செந்தமிழ்ச் செல்வி

[வித்துவான் திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை]

தன் செய்கையால் செல்வனுக்கும் செல்விக்கும் தன்பால் மிக்க வருத்த முண்டாயினும், அவர்தம், வெம்மையைத் தாங்கி அறத்தின் வழுவா தொழுகுவிக்கும் அறிவுத்திண்மை அவள் பால் நிரம்பவுண்டு. "உறுகண் ஓம்பல் தன் இயல்பாகலின், உரியதாகும் தோழிகண் உரனே" என ஆசிரியர் நன்கு வற்புறுத்துகின்றார். மேலே, தான் அச் செல்வனோடு கூடியாடியது போல்வனவும், அச் செல்வி கேட்டு நாணத் தகுவனவும் தோழி கூறியதெல்லாம், அச் செல்வியின் ஒழுக்கமும் அறவாழ்வும் குறித்தேயாகும். "மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது, பல்வேறு கவர்பொருள் நாட்டத் தானும்" (தொல்) தோழி செல்வியை ஆராய்தற்குரியள் என்று ஆசிரியர் கூறினர். இதுவே யன்றி, செல்வன்பால் செல்விக்குரிய காதலை, அவளுடைய "நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும், செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்" தகுவன கண்டு தெளிகுவள் என்றும் கூறியருளினர்.

இவ்வகையாலெல்லாம் தோழி, அச் செல்வியின் காதன் மாண்பை உணர்ந்துகொண்டபோதினும், தான் அறிய அவள் தன் காதலனுடன் கூடி யொழுகப்பண்ணும் கடமை மேற்கொள்கின்றாள். செல்வியோ அச்சமும் மடனும் நாணும் மிகவுடையள். இவற்றுட் சிறிது வழுவினும் உயிர்விடும் அத்துணை மானமுடையள். தன் உயிர்த்தோழி யாயினும், அவள் தன் களவினை யறிவளோ எனும் அச்சமும், அது காரணமாக நிற்கும் நாணமும் செல்விபால் சிறிது கெட்டாலன்றி, தோழி அவளைக் களவின்கண் இனிது ஒழுகுவிக்கும் அறத்தைச் செய்ய இயலாது. நிச்சமும் பெண்பாற் குரிய எனப்படும் அச்சத்தையும் நாணத்தையும் மிகச் சிறிதளவு கெடுக்க முயலும் தோழியின் ஒட்பம் மிக வியத்தற்குரியது. பயிற்சிக்கண் நீங்கும் அச்சத்தினும் நாணம் மகளிர்க்கு உயிரினும் சிறந்ததாகும். "உயிரிற் சிறந்தன்று நாணே" எனத் தொல்காப்பியனாரும், "உயிரினும் சிறந்த தன் நாண் யாதும் இலளாகி நகு

தலும் நகூஉம்" (கலி. 147) என நல்லந்துவனாரும் கூறுதல் காண்க. இத்துறையில் பாட்டியற்றுவதில் புலவனது புலமைத் திறம் ஓரளவு கால்கொண்டு நிற்கிறதென் றுகூட உரைக்கலாம். ஏனெனின், நாணழிவு சுட்டிய குறிப்புக்களைக் கேட்போர் அருவராது நயக்குமாறு கூறல் வேண்டும்.

அச் செல்வனுக்குக் குறைநேர்ந்த தோழி தன்பால் வந்து அவன் குறையை நயக்குமாறு கூறவருகின்றாள் என்பதனை அத் தமிழ்ச் செல்வியும் தோழியின் குறிப்புக்களால் ஒருவாறு உணர்ந்து கொள்கின்றாள் என்றாலும் அதனைப் புறத்தே காட்டாது மறைத் தொழுகுகின்றாள். இந்நிலையில், தோழி அவளிடம் வந்து, "அன்னாய், ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன், பன்னாள் வந்து பணிமொழி பயிற்றி, என் நன்னர் நெஞ்சம் நெகிழ்ந்த பின்றை, வரை முதிர்தேனின் போகியோனே (குறுந். 176) என் நெஞ்சு கலுழ்கின்றது" என்கின்றாள். ஒரு முறைக்குப் பன்முறை அவன் குறை யிரந்து நின்றது குறிப்பித்தல் காண்க. பிறிதொருகால் செல்வியை யண்மி, "அக் குன்ற நாடன், யாம் தற்படர்ந்தமை அறியான், தானும் வேனில் ஆனேறுபோலச் சாயினன் என்ப நம் மாண்நலம் படர்ந்தே" (குறுந். 74) என்கின்றாள். அவன் குறையை நயத்தற்குரிய படர்ச்சி அச் செல்விபால் உளதாகத் தானே உளப்படுத்திக் கொண்டு தோழி கூறும் திறம் காண்க. செல்வி நயவாளாயின், தோழி தன்னை யுளப்படுத்துக் கூறுதலை மறுப்பளென்பது கருத்து.

இவ்வாற்றால் செல்வி குறைநயக்கும் கருத்தினளாதலைக் குறிப்பாய் உணர்ந்து கொண்ட தோழி, மற்றொருகால் செவிலியை நோக்கி, "இதை நினைத்தால் நகைக்கு இடனாகின்றது, காண்" என்கிறாள். செவிலி, ஆர்வமுடன் "என்னையது?" என்றலும்,

"நகையா கின்றே தோழி; 'தகைய
அணிமலர் முண்டகத்து ஆய்பூங் கோதை
மணிமருள் ஐம்பால் வண்டுபடத் தைஇத்
துணிநீர்ப் பெளவம் துணையோ டாடி......
தெளிதீங் கிளவி! யாரை யோஎன்

அரிதுபுணர் இன்னுயிர் வெளவிய நீ?'எனப்
பூண்மலி நெடுந்தேர்ப் புரவி தாங்கித்
தான்நம் அணங்குதல் அறியான், நம்மில்
தான்அணங் குற்றமை கூறிக் கானல்
சுரும்புஇமிர் சுடர்நுதல் நோக்கிப்
பெருங்கடல் சேர்ப்பன் தொழுதுநின் றதுவே" (நற். 245)

என்று சொல்லுகின்றாள். இதன்கண் அவன், என் இன்னுயிர் வெளவிய நீ யாரையோ? என்று வினவி, சுடர்நுதல் நோக்கித் தொழுது நின்றது நகையாக இருக்கின்றது என்பவள், அவன்பால் செல்விக்குரிய காதலை. "தான் நம் அணங்குதலறியான்" என்றும், அவளது ஆற்றுக் காதலை "நம்மில் தான் அணங் குற்றது கூறி....தொழுது நின்றது" என்றும் கூறும் திறம் காண்க.

பிறிதொருகால், வந்து தோழிபால் விடைபெற்று நீங்கும் அச் செல்வத் தமிழ் மகன் சிறிது சேய்மைக்கண் சென்று கொண்டிருக்கின்றான். அவனைத் தோழி நம் செந்தமிழ்ச் செல்விக்குக் காட்டி, "செல்லுமன்னோ மெல்லம் புலம்பன்" என்கின்றாள். உடனே, செல்வி ஒன்றும் அறியாள்போல், "யார் அவன்? ஏன் செல்கின்றான்?" என்று வினவ, தோழி, அன்னாய்,

" கழிப்பூக் குற்றும் கானல் அல்கியும்
வண்டற் பாவை வரிமணல் அயர்ந்தும்
இன்புறப் புணர்ந்தும் இளிவரப் புணர்ந்தும்"

நம்மோடு விளையாட்டயர்ந்த செல்வமகனே அவன். அவன், இப்போது,

" தன்துயர் வெளிப்படத் தவறி, நம்துயர்
அறியா மையின் அயர்ந்த நெஞ்சமொடு
செல்லு மன்னோ, மெல்லம் புலம்பன்"

என்று உரைக்கின்றாள். "சென்றால் செல்லட்டுமே" என்பாள்போலச் செல்வி தோழியைப் பார்க்கின்றாள். உடனே, இவ்வறிவுடைத் தோழி,

"செல்வோன் பெயர்புறத்து இரங்கி முன்னின்று
தகைஇய சென்றஎன் நிறையில் நெஞ்சம்
எய்தின்று கொல்லோ தானே; எய்தியும்
காமம் செப்ப நாணின்று கொல்லோ ?"

என்று தன் நெஞ்சு கலுழ்ந்தது போலக் கூறி, மேலும்,

" உதுவ காண்அவர் ஊர்ந்த தேரே
குப்பை வெண்மணற் குவவுமிசை யானும்
எக்கர்த் தாழை மடல்வயி னானும்
ஆய்கொடிப் பாசடும்பு பரிய ஊர்புஇழிபு
சிறுகுடிப் பரதவர் பெருங்கடல் மடுத்த
கடுஞ்செலல் கொடுந்திமில் போல
நிவந்துபடு தோற்றமொடு இகந்துமா யும்மே " (அகம். 330)

என்று சொல்லி முடிக்கின்றாள். இது கேட்ட செல்வி, தன்னைப் போலவே தன் தோழியும் செல்வன்பால் மெய்யே அன்பு கொண்டொழுகுகின்றாள் எனத் தெளிந்து மகிழ்கின்றாள். இதனால், உயிரினும் சிறந்த அவளது நாணம் சிறிது நெகிழ்கின்றது.

பின்பொருகால், அத் தோழி, நம் செல்வியை நோக்கி, " அன்னாய், அச் செல்வநாடன், நெருநல் நம்மொடு கூடி நம் புனத்தே கிளிகடிந்து விளையாடினன் அன்றோ? அவன் என்பால் ஏதோ சொல்லுதற்கு முயன்றான் " என்கிறாள். " சொன்னானோ ?" என்று செல்வி வினவலும், தோழி,

" சொல்லி டம்பெறான் பெயர்ந்தனன், பெயர்ந்தது
அல்ல லன்று,அது காதலந் தோழி.
தாதுண் வேட்கையின் போதுதெரிந் தூதா
வண்டோ ரன்னஅவன் தண்டாக் காட்சி "

என்றதும், செல்வி, அவளைக் கூர்த்து நோக்குகின்றாள். தோழியோ,

" ........................அவன் தண்டாக் காட்சி
கண்டும் கழல்தொடி வலித்தஎன்
பண்பில் செய்தி நினைப்பா கின்றே " (நற். 25)

என்று மொழிகின்றாள். இதன்கண், " வண்டோரன்ன அவன் தண்டாக் காட்சி " யென்று தோழி கூறியது, நின்பால் நலன்

நுகர்தற்கு என்பால் சொல்லாடமுயன்றான்' என்றவாறு. "கண்டும் கழல்தொடி வலித்த என் பண்பில் செய்தி" என்றதனால், செல்வி, தன் உயிர்க்காதலனை அச் செல்வனைப் பலகால் காணப்பெற்றும் கூடி மகிழப்பெறுமையின் உடம்புநனி சுருங்கியதும், பாடறிந்து * குறைநயக்கும் குறி விளங்கக் காட்டாமையும் விளக்கப்படுகின்றன.

இவ்வாறு செல்வியின் உள்ளத்தை அச் செல்வன்பால் கூட்டுவித்தற்கேற்பத் தோழி பண்படுத்திக் கொண்டபின், அவளை நோக்கி,

"அறியாய் வாழி தோழி..............
மாமலை நாடனொடு மறுவின் றாகிய
காமம் கலந்த காதல் உண்டெனின்,
நன்று மன் ; அது நாடாய் கூறி ;
நாணும் நட்பும் இல்லோர்த் தேரின்
யானலது இல்லைஇவ் வுலகத் தானே ;
இன்னுயி ரன்ன நின்னொடும் சூழா து......
பெரும்பெயர் எந்தை அருங்கடி நீவிச்
செய்துபின் இரங்கா வினையொடும்
எய்யல பெரும்பழி எய்தி னேனே ;' (அகம். 268)

என்று கூறுகின்றாள். இதன்கண், நம் செல்வி, முன்பு அச் செல்வன்பால் தனித்துக் கூடிப்பெற்ற நட்பினைத் தோழிதான் உணர்ந்திருக்குமாற்றினையும் ஒருவாறு தெரிவித்துக் குறைநயப்பித்துக் கொண்ட திறம் காணலாம்.

மறுபடியும், அத் தோழியே, நம் செல்வியை நோக்கி,

"அம்மலை கிழவோன் நம்நயந்து என்றும்
வருந்தினன் என்பதோர் வாய்ச்சொல் தேறாய் ;
நீயும் கண்டு நுமரொடும் எண்ணி
அறிவறிந் தளவல் வேண்டும் ; மறுத்தற்கு
அரிய வாழி தோழி ; பெரியோர்
நாடி நட்பின் அல்லது
நாட்டுநா டார்தம் ஒட்டியோர் திறத்தே" (நற். 32)

---

* குறைநயத்தல்—சொல்லிக் கொள்ளும் குறையைப் போக்கி மகிழ்வித்தல்.

என அறிவுடைய நன்மொழி கூறி அவளைக் குறைநயப்பிக்கின்றாள். இனி இவ்வகையேயன்றி, வேறு வகையில், "செல்வன் போந்து,

அரும்பலைத் தியற்றிய சுரும்பார் கண்ணி
பின்னுப்புறந் தாழக் கொன்னே சூட்டி
நல்வரல் இளமுலை நோக்கி நெடிதுநினைந்து
நில்லாது பெயர்ந்தனன் ஒருவன்; அதற்கே......
படப்பை நின்ற முடத்தாள் புன்னைப்
பொன்னேர் நுண்தாது நோக்கி
என்னும் நோக்கும்இவ் வழுங்க லூரே" (அகம். 180)

என்றும்,

"கொண்கன் ஊர்ந்த கொடிஞ்சி நெடுந்தேர்
தெண்கடல் அடைகரைத் தேர்மணி யொலிப்பக்
காண வந்து நாணப் பெயரும்;
அளிதோ தானே காமம்
விளிவது மன்ற நோகோ யானே" (குறுந். 212)

என்றும் தோழி, நம் செல்வி குறைநயக்குமாறு சொல்வன பலவாகும். அவையெல்லாம் விரிப்பின் பெருகும். (கலி. 60,61)

இவ்வண்ணம் தோழி கூறியவாற்றால், நம் செந்தமிழ்ச் செல்வி, அச்சம் நீங்கி, நாணும் ஒரு சிறிது நெகிழ்ந்து, தனக்கும் அச் செல்வனுக்கும் உளதாகிய தொடர்பினைக் குறிப்பாய் உரைக்கலுறுவள்.

"சுடர்த்தொடீஇ! கேளாய்: தெருவில்நாம் ஆடும்
மணற்சிற்றில் காலின் சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி (செல்வன்), மேலோர்நாள்,
அன்னையும் யானும் இருந்தேமா, 'இல்லிரே!
உண்ணுநீர் வேட்டேன்' எனவந்தாற்கு, அன்னை
'அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்!
உண்ணுநீர் ஊட்டிவா' என்றாள்; என, யானும்
தன்னை யறியாது சென்றேன்; மற்றுஎன்னை,
வளைமுன்கை பற்றி நலியத், தெருமந்திட்டு,
'அன்னாய்! இவனொருவன் செய்ததுகாண்,' என்றேனா;

அன்னை அலறிப் படர்தரத், தன்னை, யான்,
'உண்ணுநீர் விக்கினான்' என்றேனா ; அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவ, மற்று, என்னைக்
கடைக்கண்ணால் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டம்
செய்தான்அக் கள்வன் மகன்" (கலி. 51)

என்று அச் செல்வி உரைக்கின்றாள். இதனைக் கேட்ட தோழி, "அன்னாய், இவ்வாறு முன்பே உறவுண்டாகவும், என்னை இதுகாறும் மறைத்தொழுகினீரன்றோ! மேலும், நீ கூறியவகையே நோக்கின். அவன் அத்துணை வழிபாடொன்றும் தங்கட்குச் செய்திலன்போல இருக்கிறதே; பட்டிமையுடையாரை நட்டல் கூடாதே" என்று சுடுவதுபோல உரைக்கின்றாள். அது பொறாத செல்வி, அவன் தன்னை வழிபட்ட நெறியும், தான் தன் பெருமை குன்றாது அதனை ஏற்ற நிலையும் கூறலுற்று,

"இன்னகை இலங்கெயிற்றுத் தேமொழித் துவர்ச்செவ்வாய்
நன்னுதால் நினக்கொன்று கூறுவாம் ; கேள் ; இனி :
நில்என நிறுத்தான், நிறுத்தே வந்து
நுதலும் முகமும் தோளும் கண்ணும்
இயலும் சொல்லும் நோக்குபு நினைஇ,
ஐதேய்ந் தன்று, பிறையு மன்று ;
மைதீர்ந் தன்று மதிய மன்று ;
வேயமன் றன்று மலையு மன்று ;
பூவமன் றன்று சுனையு மன்று ;
மெல்ல இயலும் மயிலு மன்று ;
சொல்லத் தளரும் கிளியு மன்று ;
எனவாங்கு,
அனையன பலபா ராட்டிப், பையென
வலைவர் போலச் சோர்பதன் ஒற்றிப்,
புலையர் போலப் புன்கண் நோக்கித்
தொழலும் தொழுதான், தொடலும் தொட்டான்,
காழ்வரை நில்லாக் கடுங்களிறு அன்னோன்
தொழூஉம் தொடூஉம் அவன்தன்மை
ஏழைத் தன்மையோ இல்லை தோழி" (கலி. 55)

என்று கூறி முடிக்கின்றாள். தோழி, மகிழ்ந்து, நம் செல்வியை 'வருக' எனத் தனியே அழைத்துச்சென்று, "நீ ஈங்கே இரு;

யான் சென்று பூக்கள் நல்லன கொணர்கின்றேன்" என்று சொல்லி நீங்குகின்றாள். ஆங்கே சிறிது போதில், அச்செல்வன் போந்து நம் செல்வியைக் கண்டு கழியுவகை எய்துகின்றான். நம் செல்வியும் முதலில் பெரிதும் நாணி, தோழியின் செயல் நுட்பம் தெளிந்து, செல்வனது கூட்டத்தால் இன்பம் சிறக்கின்றாள்.

இவ்வாறு, நம் தமிழ்ச்செல்வியும் செல்வனும் கடிமணம் புணர்தற்கிடையே பலமுறை ஒருவரையொருவர் கண்டு கூடி மகிழ்வர்; ஆனால், இவர்கட்கிடையே மகப்பேற்றுக்குரிய மெய்யுறு புணர்ச்சி நிகழ்வது கிடையாது. பிற்காலக் கோவை நூல்களில் அஃது உளது போன்ற குறிப்புக்கள் காணப்படும். ஆயினும், அவை சங்க காலத்து ஒழுக்கமன்மையின் கொள்ளப் படா.

---

எனது பெயரால் எவனை நான் மூடிவைத்திருக்கின்றேனோ, அவனைச்சுற்றி இச் சிறையின் சுவரைக் கட்டி எழுப்புவதே என் வேலையாய் விட்டது. இச் சுவர் நாளுக்குநாள் வளர்ந்து வானை நோக்கிப் போகையில், அதன் இருண்ட நிழலிலே எனதுண்மை நிலையில் அறிவை யான் இழந்துவிடுகின்றேன்.

இந்தச் சுவரைப்பற்றி யான் பெருமை பாராட்டி, அதில் ஒரு சிறு துளையும் இல்லாதிருக்கத், துகளும் மணலுங் கொண்டு மேற்பூச்சுப் போடுகின்றேன். இவ்வாறு என் கவலைகள் பெருகுவதால் எனது உண்மை நிலையைப்பற்றிய அறிவை இழந்துவிடுகின்றேன்.

—கவி இரவீந்திரர்.

---

# மதிப்புரை

---

**நெடுநல்வாடை (ஆராய்ச்சி):—**[ ஆசிரியர் : இராவ்சாகேப் K. கோதண்டபாணி பிள்ளை B. A. டெபுடி கலெக்டர், சென்னை. வெளியிட்டோர்: சென்னைத் தமிழ்ச் சங்கம். விலை ரூ. 1-4-0.

கடைச்சங்க காலத்தில் எழுந்த 'பத்துப் பாட்டு' என்னும் நூல் தொகுதியுள், 'நெடுநல் வாடை' என்பதும் ஒன்று. அது, ஆசிரியர் நக்கீரரின் எழுத்தோவியம். இனிய அகவற் பாட்டால் அமைந்தது. அதனை இப்போது திறன் ஆய்ந்து தெளிதலாக, அழகிய உரைநடையில், திரு. பிள்ளையவர்கள் ஆராய்ந்து எழுதி, திருவாளர் திரு. வி. க. மணி விழா அணிகலனாக வெளிவருமாறு உதவியிருக்கின்றார்கள்.

நூல், திரு. S. சோமசுந்தர பாரதியார் M. A., B. L. அவர்கள் முன்னுரையோடும், திரு. வித்துவான் நெ. பொ. மீனாட்சிசுந்தரனார் M. A., B. L., M. O. L. அவர்கள் அணிந்துரையோடும் வெளிவந்துள்ளது. 1. பொதுச் சிறப்பு 2. மக்கள் தொகுதி - ஆடவர். 3. மக்கள் தொகுதி - மகளிர். 4. வினைய உயிர்த் தொகுதி. 5. தொகுத்து முடித்தல் என்னும் ஆழ்க்தமைந்த உள்ளுறை பொருந்தியது. நூலின் இறுதியில் 'நெடுநல் வாடை' யின் செய்யுட்பகுதியும், அதற்கு நச்சினார்க்கினியர் கூறிய உரையும் தகுமுறையில் அமைத்துச் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

திரு. பிள்ளையவர்கள் எதனையும் ஆழ்ந்து காணும் நுண்மதியினர். அந்நலன் இந்த ஆய்வு நூலில் நிறை துளும்பலாய்த் ததும்பி வழிகின்றது. நூலின் தலைப்பு நெடுநல்வாடை என்றிருந்தாலும் அதனை 'நக்கீரர் உள்ளம்' என்றே கூறிவிடலாம்படி அத்துணைக் கடைந்து ஆசிரியர் திரட்டியிருக்கின்றார். தமிழும், நடையும் பேரமிழ்தமாய் உள்ளன. கருத்தின் தெள்ளிய அலைகளே இந்நூலின் தொடர்கள். எல்லாம் அழகிய சிறுசிறு சொற்றொடர்கள். உயர்ந்த தமிழும், நடையும், ஆராய்வும், வளனும் அமைந்த சிறுசிறு சொற்றொடர்களாலான உரைநடை நூலுக்கு. இந்நூல், தலைசிறந்த இலக்கியம் எனலாம்.

ஆயினும், நூல் முற்றிலும் ஒரே வகையாய்ச் சிறு சிறு தொடர்களாலோ அல்லது பெரிய பெரிய தொடர்களாலோ அமைவது, இயல்பான நடையாகாது. கருத்துக்கும் இடத்துக்கும் ஏற்றபடி தொடர்களும் அமைந்தொழுகுதலே இயற்கை ஓவியமாதலோடு, கற்பார் அறிவுக்கும் முயற்சியற்ற எளிமையும், உள்ளம் அள்ளும் இனிமையும் நல்கும். வேண்டாக் கூறலால் ஆகும் விரிவும், சொல் பல்குதலும், கருத்து மயக்கமுங்கூட இதனால் குறைந்து நூல் தெளிவுறும்.

தமிழ்க்கு ஆசிரியர் சிறந்த விருந்தளித்திருக்கின்றனர். தமிழ் மாணவர் ஒவ்வொருவர் கையிலும் இந்நூல் இருத்தற்குரியது.

**வையாபுரிப் பள்ளு :** பழனித் திருக்கோயில் பொறுப்பாளர் திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை பி. எ., பி. எல். அவர்களால் வெளியிடப்

பெற்றது. தளவாய்புரம் திரு. அ. அருணாசலம் பிள்ளையவர்கள் எழுதிய குறிப்புக்களுடன். விலை அணா 10.

திருவாவினன்குடி எனப்படும் பழனித் திருப்பதி அமைந்துள்ள நாடு 'வையாபுரி நாடு' எனவும் வழங்கப்பெறுமென்பது, இந்நூலின் முகவுரையினால் தெரிகின்றது. பழனியாண்டவராகிய முருகக் கடவுளைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு 'பள்ளு' என்னும் நாடகக் காப்பிய வகையில் இந்நூல் இயற்றப்பட்டிருக்கின்றது. ஏறக்குறைய மூந்நூறு ஆண்டுகட்கு முன் இவ் வையாபுரி நாட்டின் குறுநிலமன்னராய் விளங்கிய 'வேலச் சின்னோவையன்' என்பவர் இந்நூலின் ஆசிரியர். ஆசிரியரின் தமிழ்ப்பற்றும் தெய்வ அன்பும் போற்றற்பாலன. இந்நூலைப் பற்றிய பலவகையான குறிப்புகளை இதன் முகவுரையினால் அறியலாம். இறுதியில் 'அருஞ் சொல் அகராதி' யும்; வழிபடுந் தெய்வங்கள், படித்தரம் பெற்ற கோயில்கள், நெல்களின் பெயர்கள் முதலியனவும் 'பழனித்துரை வண்ணம்' என்னுஞ் செய்யுட் பகுதியின் இணைப்பும் உள்ளன.

நாட்டில் வெளிவரும் இப் பள்ளுப் போன்ற பலவகையான இலக்கிய நூல்களால் நாட்டின் பற்பல பகுதிகளிலும் வழங்கும் சொல், குறியீடு, மரபு முதலிய வழக்குகள் பலவும் ஆராய்ந்தறியலாம். இத்தகைய நன் முயற்சிகளில் ஊக்கமெடுத்துவரும் திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளையவர்கள் தொண்டு பெரிதும் பாராட்டற்பாலன.

**கோபாலகிருஷ்ண பாரதியார் :** ஆசிரியர் : சுத்தானந்த பாரதியார். வெளியிட்டவர்; இராமச்சந்திரபுரம் அன்பு நிலையத்தார். விலை அணா $2\frac{1}{2}$

சிறிய பையளவு நூல் ; ௬௪ - பக்கங்கள். 'நந்தனார் சரித்திர கீர்த்தனங்கள்' இயற்றியும் இசைத்தும் புகழ்பெற்ற கோபாலகிருஷ்ண பாரதியாரவர்கள் வாழ்க்கை வரலாற்றையும் அறிவுரைகளையும் உரைநடையில் விளக்குவது.

எழுத்துமுறை நன்றாயிருக்கிறது. தமிழ்தான் இன்னுந் தமிழ்மணம் பெறவேண்டும். கருத்துக்களும் முறைகளுமே முதன்மையென்று கருதிக் கொண்டு தூய தமிழின் இனிமையைச் சற்றும் பொருள் செய்யாது மிக எளிதாக எள்ளித் தள்ளிவிடும் இயல்பு, தமிழ்நாட்டுக்குப் பொதுமுறையிலன்றிச் சிறப்பு முறையில் ஆக்கந்தருவதாக ஆகாது. அது, 'மாந்தர் தம் உரம் சாச் செய்யும் உயர் தவத்தோடு (நற், ௨௨௬) ஒக்கும்.

---

# செய்திகள்

**திரு. வி. க. மணிவிழா**

இம் மணிவிழா 25-8-43 முதல் தமிழ்த் திருநாட்டில் சென்னை கோவை, சர்க்கார் சாமக்குளம், மேலைச் சிவபுரி, வேகுப்பட்டி, நேமத்தான் பட்டி, பள்ளத்தூர், அரிமழம் முதலிய பல பகுதிகளில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றிருக்கின்றன. சென்னையில், பல கழகத்தார் தனித்தனியாகவும்

சேர்ந்தும் விழாக்கள் நிகழ்த்தினர். சென்னையில் திவான்பகதூர் திரு. சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், செட்டிநாட்டரசர், சி. இராஜகோபாலாச்சாரியார், திவான்பகதூர் டி. எம். நாராயணசாமி முதலியார், இராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், எஸ். முத்தையமுதலியார், கே. எம். பாலசுப்பிரமணியம், சென்னை மேயர் இராவ்பகதூர் சி. தாதுலிங்க முதலியார், சுதேசமித்திரன் ஆசிரியர் சீனிவாசன், எஸ். சச்சிதானந்தம் பிள்ளை, கே. பாலசுப்பிரமணிய அய்யர் முதலியோர் விழாவிற் கலந்து கொண்டனர். திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் திரு. வி. க. அவர்கட்குப் பொன்னுடை வழங்கப்பெற்றது.

## இளைஞர் நல்லற மன்றம்

மன்றக் கொள்கைகளான **மக்களின் அறியாமைப் பிணி ஒழித்தலையும், ஏழைகளின் பசிப்பிணி போக்கலையும்** ஒருங்கே ஆற்றிவர, ஐந்தாம் ஆண்டிற்கென, அடியிற் காணும் தமிழன்பர்கள் நிருவாகக் குழுவினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்கட்கு இறைவன் துணைபுரிவாராக!

**தலைவர்**—திரு. வித்துவான் S. பலராம நாயகர்; **உதவித் தலைவர்**—திரு. S. விஸ்வநாதம்; **செயலாளர்**—திரு. மு. தியாகராயன்; **உதவிச் செயலாளர்**—திரு. கெ. ப. இராஜு; **பொருட் காப்பாளர்**—திரு. G. சண்முகம் பிள்ளை; **காரிய நிருவாகத்தினர்.** (1) திரு. தி. வேங்கடேசன், (2) திரு. G. வேங்கடாசலபதி, (3) திரு. D. அரங்கநாதன், (4) திரு. T. சம்பந்தன், (5) திரு. தி. வே. கண்ணபிரான் முதலியார், (6) K. S. கோதண்டராமன்.

—தி. வேங்கடேசன்,
(உ) செயலாளர், 25-7-'43.

---

## நக்கீரர் கழகம், சென்னை

### நக்கீரர் தமிழ் இலக்கிய வகுப்பு

வகுப்பு 11

கம்பஇராமாயணம் :—**தமிழகத்தின் தனித்தலைவர் திரு. வி. க. மணிவிழா நினைவாக** மேற்படி இலக்கிய வகுப்பில் **கம்ப இராமாயண** வகுப்பு, **4-9-43 சனிக்கிழமை** முதல் ஒவ்வொரு சனிக்கிழமை மாலை **6½-மணி** முதல் **7½-மணிவரை** மேற்படி கழகத் **தமிழ்ப் புலவர் திரு. கு. பாலசுந்தர முதலியார்** அவர்களால் பெத்துநாய்க்கன் பேட்டை, அம்மன் கோவில் தெருவில் உள்ள **சமரச சுத்த சன்மார்க்க சங்க அருட்பெருஞ் சோதி நிலயத்தில்** நடக்கும்.

---

# தமிழர் தொன்மை விளக்கும்
## கழக நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| மோகெஞ்சதரோ (சிந்து வெளிநாகரிகம்) | 2 | 0 |
| குமரிக்கண்டம் (கடல் கொண்ட தென்னாடு) | 1 | 0 |
| சங்கநூற் கட்டுரைகள் (முதற் புத்தகம்) | 1 | 4 |
| ,, (2-ம் புத்தகம்) | 1 | 8 |
| கால்டுவெல் ஒப்பிலக்கணம் | 1 | 8 |

## பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி பதிப்புக்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| நாற்பெரு வள்ளல்கள் | 0 | 8 |
| துர்க்காவதி | 0 | 10 |
| இராஜாராம் மோகனராய் | 0 | 8 |
| சத்திய நாராயணன் | 0 | 4 |
| மூன்று சிறுகதைகள் | 0 | 4 |
| நல்ல குழந்தை (சம்பந்தர்) | 0 | 3 |
| நல்ல எறும்பு | 0 | 3 |
| சன்மார்க்க தீபம் (3 பகுதிகள்) | 1 | 5 |
| ஏப்ரஹாம் லிங்கன் | 0 | 6 |
| அறிவுச்சுடர் | 0 | 14 |
| கட்டுரை மலர்மாலை | 0 | 12 |
| பல்வகைக் கட்டுரைகள் | 1 | 0 |

## சுத்தானந்த பாரதியார் புதிய நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| இனிய தமிழ் இலக்கணம் | 3 | 4 |
| சிவஞான தீபம் | 2 | 4 |
| The Revelations of Saint maikandar | 1 | 8 |
| சிதம்பர கீதம் | 1 | 8 |
| கஸ்தூரி (சிறுகதை) | 0 | 6 |
| பைந்தமிழ்ச் சோலை (3-ம் பதிப்பு) | 0 | 8 |
| கல்விக் கதிர் | 1 | 4 |
| முன்னேற்றப் பாடல்கள் | 1 | 4 |
| கவிக் கனவுகள் | 0 | 12 |

## புத்தக விலை ஏற்றம் பற்றிய
### —அறிவிப்பு—

காகிதம், கலிக்கா, அட்டை முதலியவற்றின் விலையேற்றத்தால் பதிப்பாளர்களெல்லாம் புத்தக விலையைக் கூட்டியும் கழிவைக் குறைத்தும் உள்ளார்கள். எனவே எங்களிடம் புத்தகம் வாங்க விரும்பி எழுதுபவர்கள் கூடிய விலையின்படியே பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

## தமிழைப் பிழையின்றித் திருத்தமாக எழுதப் பயன்படும் நூல்கள்

1. தமிழைப் பிழை நீக்கி எழுதுமுறை — அணா 2.
2. அழைப்பிதழ் எழுதுமுறை — அணா 1.
3. வடசொல் தமிழ் அகரவரிசை — அணா 2.
4. மரபுத்தொடர் அகரவரிசை — அணா 2.
5. உவமை யகர வரிசை — அணா 2.
6. பழமொழி யகர வரிசை — அணா 2.
7. மக்கள் பெயர் அகர வரிசை — அணா 2.

**தமிழ்ப் பாதுகாப்பு நூற்றிரட்டு:** மேற்கண்ட ஏழு நூல்களும் அடங்கியன. கலிக்கா கட்டடம் ரூ. 1 4

**வடசொல் தமிழ் அகர வரிசை** (பெரிய நூல்): திருவாட்டி. தி. நீலாம்பிகையம்மையார் எழுதியது. கலிக்கா ரூ. 1 8

**கட்டுரை வரைவியல் அல்லது உரைநடை இலக்கணம்:** வித்துவான் ஞா. தேவநேயப் பாவாணர் எழுதியது. (அச்சில்)

---

பண்டித புலவ வித்துவான் கீழ்கலைத் தேர்ச்சியாளன்
ஞா. தேவநேயன் (B. O. L.) எழுதியவை

### மொழியாராய்ச்சிபற்றிய நூல்கள்

(1) **ஒப்பியன் மொழி நூல்: முதன் மடலம் 1-ம் பாகம்.** உலகிலுள்ள புலமொழிக் குடும்ப இயல்புகளையும் சரித்திரத்தோடொட்டப் பன்னீராண்டாய்ந்து எழுதியது. தமிழே திருந்திய இலக்கிய மொழிகளுக்குள் முதன்முதல் தோன்றிய உயர்தனித் தாய்மொழி யென்பதையும், தமிழ் நாகரிகமே முன்மையும் முதன்மையும் வாய்ந்ததென்பதையும் பிறவற்றையும் தக்க பல்வேறு சான்றுகளுடன் விளக்குவது. 400 பக்கம் கொண்டது. சில படிகளே உள. முந்துக. விலை ரூ. 3.

(2) **சுட்டு விளக்கம்.** அல்லது **அடிப்படை வேர்ச்சொல் ஐந்து.** தமிழ் பல்லாயிரமாண்டுகட்குமுன் குமரி நாட்டில் தானே தோன்றிய இயற்கை மொழி யென்பதையும், அது திரவிடத் தாய் மட்டுமன்றி ஆரிய மொழிகட்கும் மூலமென்பதையும், கலைமுறைப்படி சொல்லியல் (Etymology) வாயிலாக விளக்குவது. மொழியாராய்ச்சியாளர்க்கெல்லாம் இன்றியமையாதது. சுமார் 120 பக்கங்கள் கொண்டது. வெளிவந்துவிட்டது. விலை ரூ. 1 4

---

**குறிப்பு:** இவை கழகத்தில் கிடைக்கப்பெறும்.

Printed by Mr. C. M. GOVINDARAJAN, at The Progressive Printers, 2/17, Coral Merchant Street, G.T., Madras. Edited and Published by Mr. V. Subbiah for The S. I. S. S. W. P. Society, Tinnevelly, Ltd. No. 8, Coral Merchant St., G.T. Madras.